Registered as a NewsPaper


விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-04 17-03-2005 வியாழக்கிழமை ஓசை 27



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11459) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# ஆகக் கூடுதலான விட்டுக் கொடுப்புடன்

# பொதுக் கட்டமைப்பிற்குத் தயாராகியுள்ளோம்!

## சுவீடன் அபிவிருத்தித்துறை அமைச்சரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(ஸ்ரோக் கொம்)

**அரசாங்கத்துடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதால் ஆகக் கூடுதலான விட்டுக்கொடுப்புக்களுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்கத் தயாராகியிருப்பதாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சுவீடன் அபிவிருத்தித்துறை அமைச்சர் கரின்ஜம் மாரினிடம் தெரிவித்தார்.**

சுவீடன் நாட்டின் அபிவிருத்தித் துறை அமைச்சர் கரின்ஜம்மரினை நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் தலைமையிலான குழுவினர் சுவீடன் தலைநகரில் சந்தித்துப் பேசியுள்ளனர். இந்த சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப தமிழச்செல்வன் கருத்து வெளியிடும் போது அரசாங்கத் துடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை தாங்கள் உணர்ந்துள்ள தால் ஆகக்கூடுதலான விட்டுக்கொடுப்புகளுடன் பொதுக்கட்ட மைப்பை உருவாக்க தயாராகியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நோர்வேத் தரப்பால் முன்வைக்கப் பட்டுள்ள திட்டவரைவு வடக்கு-கிழக்கு பகுதிகளின் மீள் கட்டுமான

(12 ஆம் பக்கம் பார்க்க)



## புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு தேசியத்தலைவர் நன்றி தெரிவிப்பு

தமிழர் தாயகத்தை ஆழிப்பேரலை தாக்கி அழித்தபோது பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலகம் முழுமையிலும் நிதிகளையும் பொருட்களையும் வேகமாகத் திரட்டி தாயகத்துக்கு அனுப்பிய புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

நோர்வே பேகன் நகரில் புலம்பெயர் தமிழ் மக்களைச் சந்தித்து கலந்துரையாடிய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தேசியத் தலைவரின் நன்றித் தகவலை அறிவித்தார். சு.ப.தமிழ்ச் செல்வன் கூறியதாவது: ஆழிப்பேரலை தாக்கியபோது எமது மக்களின் உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. இந்த மக்கள் யாவற்றையும் இழந்து நிர்க்கதியாகினர். இவர்களுக்கான மீட்பு நடவடிக்கைகளை விடுத லைப்புலிகள் வேகமாக மேற்கொண்டனர். விடுதலைப் புலிகளின் முழு வளங்களும் இதற்குப் பயன் படுத்தப்பட்டன. விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல்விவகாரக்குழு ஜேர்மன் வெளிநாட்டமைச்சுடன் சந்திப்பு

(பேர்ளின்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தில் சுவீடன் ஸ்ரொக் கொமிலிருந்து நேற்றுக் காலை 9.05 மணிக்கு ஜேர்மனியின் தலைநகர் பேர்லினுக்கு சென்றுள்ளனர்.

இக்குழுவினரைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஜேர்மன் கிளைச் செயற்பாட்டாளர்கள், துணையமைப்பு செயற்பாட்டாளர்கள் மற்றும் பேர்லின் வாழ் தமிழ்மக்கள் ஆகியோர் வரவேற்றனர். சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான இக்குழுவில் தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் மற்றும் மகளிர் அரசியல துறை துணைப்பொறுப்பாளர் கீதா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஜேர்மனிக்குச் சென்றுள்ள இவர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசு பலத்த முட்டுக்கட்டை போடுகிறது!

### கனேடிய பாராளு. குழுவிடம் புலிகள் விபரிப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் சமாதான முயற்சிகளில் மிகுந்த அக்கறையுடன் செயற்பாடுகளை முனனெடுத்து வருகின்றார். ஆனால், சிறிலங்கா அரசு சமாதான முயற்சிகளில் பலத்த முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வருகிறது என தமிழீழ அரசி யல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இடம பெற்ற கனடா பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருடான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது: இனப்பிரச்சினைக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)



## சிறிலங்கா ராணுவச்சிப்பாய் யாழ்.அரசியல் துறைச் செயலகத்தில் சரண்

கெமுனுவோச் படையணியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் இராணுவ அதிகாரிகளின் கொடுமை தாங்காது சாவகச்சேரி சிறிலங்க படை முகாமொன்றிலிருந்து தப்பித்துள்ளார். இவர் நேற்று யாழ்.மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் சரணடைந்துள்ளார்.

கே.எம்.கிரிசாந்த ரணில் சாந்தகலும் (வயது 23 மண்டலெல கம்பஹா மாவட்டம்) என்பவரே சரணடைந்தவராவார். பிற்பகல் 4.00 மணியளவில் குறிப்பிட்ட இராணுவச்சிப்பாய் யாழ்.மாவட்ட அரசியல்துறையினரால் சர்வ தேசச் செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி திருப்ரெட் என்பவரிடம் கையளிக்கப்பட்டார். (41,28,33))

## தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவு நாட்கள் சனியன்று ஆரம்பம்

தியாகதீபம் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு தினங்களும், நாட்டுப்பற்றாளர் தினங்களும் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 9.00 மணிக்கு தமிழீழ தேசியக்கொடி ஏற்றக் கூடிய இடங்களில் பொதுச்சுடரேற்றல், தேசிய கொடியேற்றல், திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி தொடர்ந்து மலர்மாலை அணிவித்து, மலர்தூவி, அகவணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.அன்றிலிருந்து அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரையான நாட்களில் சிரமதானங்கள், கருத்தரங்குகள், கிராமவாரியாக உண்ணாவிரதக் கூட்டங்களும் இடம்பெறும். இறுதி மூன்று நாட்களான 17,18,19 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

இறுதி நாளான 19.04.2005 அன்று மாலை உண்ணாவிரதம் நிறைவு பெற்றதும் நினைவுக் கூட்டங்கள் இடம்பெறும்.

## வரி விளம்பரம்


### பொய்கை

டிஜிற்றல் அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், புகைப்படங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல், கணினி, தட்டச்சு, பக்கவடிவமைப்பு, ரென்சில் கட்டிங், சீடி றைற்றிங் மற்றும் கணினிப் பதிப்புக்கள்போன்ற கணினி வேலைகளை விரைவாகச் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.பொய்கை, டிப்போவீதி, கிளிநொச்சி. (5856)

### புதிய வர்த்தகப் பிரிவு ஆரம்பம்

எட்வின் கல்வி நிலையம் புதுக்குடியிருப்பு 2007 A/L புதிய வர்த்தகப் பிரிவின் சகல பாடங்களும் 19.03.2005 (சனி) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றது என்பதனை சகல மாணவர்களுக்கும் அறியத்தருகின்றேன். நிர்வாகி. (5808)

### காணிவிற்பனைக்குண்டு

இல 135, ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள ஒரு ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- ஆ.நடராசன் (JP) இல. 166, ஜெயந்திநகர். விலை பேசித் தீர்க்கப்படும். (5854)


### மின்சாரம் பெற விண்ணப்பிக்குக

இலங்கை மின்சாரசபையினரால் புதுக்குடியிருப்பில் சில பகுதிகளுக்கு மின் வழங்குவதற்கான வேலைகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயாணந்தா தெரிவித்துள்ளார். மின்சாரத்தைப் பெற தகுதியுடையோர் அந்தந்தப் பகுதி கிராமசேவையாளர்களிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (08)

# உபகரணங்கள் வழங்கப்பட்டன

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் "இரட்சனியசேவை"நிறுவனத்தினால் சுனாமிஅனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், வழங்கும் நிகழ்வு அண்மையில் செம்பியன் பற்று அ.த.க பாடசாலையில் நடைபெற்றது.

இதன்போது 200 பாடசாலை மாணவர்களுக்கு தலா 1500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. அத்துடன் பாதிக்கப்பட்ட பதினொரு பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களாக கரம்போட், உதைபந்து, துடுப்பாட்டத் தொகுதி, கரப்பந்து தொகுதி, வலைப்பந்து தொகுதி, கற்றல் செயற்பாட்டிற்கான வெண்பலகை எழுது பொருட்கள் என்பன பாடசாலை அதிபர்களிடம் உடுத்துறை மாகவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கிளி.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ச.எழிலன்பன், வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மூவேந்தன் "இரட்சனியசேவை" நிறுவனப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள், என்ப்பலர் கலந்து கொண்டனர்.

-புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில்-

# கண் கற்றாக் சத்திரசிகிச்சை

## சனிக்கிழமை வன ு நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)

இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள கண் சத்திரசிகிச்சை நிபுணர் புவனச்சந்திரன் அவர்களின் தலைமையிலான குழுவினரால் எதிர் வரும் 19 ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் கண் கற்றாக் சத்திரசிகிச்சைகள் நடத்தப்பட வுள்ளன.



(08)

கண்கற்றாக் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.


பார்வைக் குறைபாடு உள்ளவர்கட்கு நவீன கருவிகள் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட வுள்ளதென மருத்துவப் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரை நடைபெற்ற சிகிச்சையின் மூலம் நூற்றுக்கு மேற்பட்டவூர்கள் பயன் பெற்றுள்ளனர். அத்துடன் கண்பரிசோதித்து மூக்குக் கண்ணாடிகளும் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக வழங்கப் பட்டுள்ளன.

இச் சத்திரசிகிச்சைக்கு என வைத்தியசாலையில் விசேட கூடாரங்களும் அமைக்கப் பட்டுள்ளன. (08.சோ)

### தூக்கில் தொங்கி மரணம்

வவுனியாவில் இளம்குடும்பப் பெண் ஒருவர் தூக்கில்தொங்கி மரணமாகியுள்ளார். வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் நேற்று அதி காலை இந்தப்பெண் தூக்கில் தொங்கிய நிலையில் மரணமடைந்தார். (21)



சிலாவத்தை அன்னம்மாள் கோவில் புதிய கட்டடத்தினை யாழ். ஆயர் அருட்தந்தை தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார்.



முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் நல்லாயன் நிதி உதவியில் நல்லாயன் சபைத் தலைவி அருட்சகோதரி அனிற்றா சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கடந்த திங்கட்கிழமை முதலாவது படகினை வழங்குவதைப் படத்தில்காணலாம்.(படங்கள்:-சகிலா)


முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன்
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடாத்தும்

மின்னொளியில் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி
2005

எம்மால் நடாத்தப்படுகின்ற மேற்படி சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

போட்டிகள் முதலில் விலகல் முறையிலும், தெரிவு செய்யப்படும்
6 கழகங்களுக்கு சுழர்ச்சி முறையிலும் போட்டிகள் நடைபெறும்

பதிவுசெய்யும் இடங்கள்

01.இளையோர் செயற்பாட்டு மையம்,கிளிநொச்சி.
02.அமல் பல் கட்டும் நிலையம், புதுக்குடியிருப்பு.

பதிவுக்கட்டணம் ரூபா 500.00 (சுழர்ச்சிமுறையில் உள்வாங்கப்படும் கழகங்கள் மீண்டும் ரூபா 500.00 செலுத்தப்படவேண்டும்)

விண்ணப்ப முடிவு திகதி 20.03.2005

விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம்,
புதுக்குடியிருப்பு.
(5807)





# கோயில் வயல் கிராமத்தில்; வலுப்படுத்தல் பயிற்சி நெறி!

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தில் கோயில் வயல் கிராமத்தில் கிராம மட்ட அமைப்புக்களுக்கான வலுப்படுத்தல் பயிற்சி நெறியின் முதலாம் கட்டப் பயிற்சி கடந்தவாரம் நடைபெற்றது.

கோயில் வயல் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கோயில் வயல் சமூக உணர்வூட்டலாளர் செல்வி ரகுபதி தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரச செயலக திட்டமிடல் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் இணைப்பாளர் க.ரவிக்காந் திட்டம் தொடர்பான விளக்கத்தினையும், சிறப்புரையினையும் நிகழ்த்தினார்.

தொடர்ந்து பயிற்சி வகுப்பினை மாவட்டச் செயலக திட்டமிடல் பகுதியைச் சேர்ந்த அமல்ராஜ் கேதீஸ்வரன் ஆகியோர் வழங்கினர்.

இப்பயிற்சி வகுப்பில் கிராம அபிவிருத்திச் சங்கம், சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (சோ)

# மாலை நேரவகுப்புக்கள் ஆரம்பம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆழியவளை மகாவித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகியவற்றின் உயர்தர மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன.

றீடோவின் ஆதரவுடன் தமிழீழ மாணவர் அமைப்பினர் இந்த வகுப்புக்களை ஒழுங்கமைப்புச் செய்து நடாத்தி வருகின்றனர்.

### யாழ்.பல்கலைக்கழக மருத்துவ

# பீடாதிபதியின் பதவி விலகல் குறித்து ;

# மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விளக்கம்!

(யாழ்ப்பாணம்)

**யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி நேற்று முன்தினம் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். இது குறித்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் [illegible] குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது மாணவர்கள் பொதுக்கூட்ட முடிவின்படி இறுதியாண்டு சத்திர சிகிச்சை நெறியை மீள ஆரம்பிக்கக் கோரி பல்கலைக்கழக முன்றலில் நேற்று முன்தினம் ஒன்று கூடினர்.

சத்திரசிகிச்சை நெறியை மீள ஆரம்பிக்கும் வரை பல்கலைக்கழகத் துணைவேந்தரை பல்கலைக்கழக அலுவலகத்தினுள் உள்நுழைய அனுமதிக்கமாட்டோம் என்பதைத் தெளிவாக துணைவேந்தர், பீடாதிபதி மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் கடிதங்கள் மூலமும், பத்திரிகை வாயிலாகவும் அறிவித்திருந்தோம்.

துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதியுடன் நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் பல்கலைக்கழகத்தினுள் வந்ததனையடுத்து மருத்துவபீட மாணவர்கள் துணை வேந்தரையும் அவருடன் வந்த பீடாதி பதியையும் சூழ்ந்துகொண்டனர்.

அங்கிருந்த எமது மாணவர்கள் துணை வேந்தரை அவரது அலுவலகத்திற்குச் செல்வதனைத் தடுத்து நிறுத்தியபோது "பீடாதிபதி அவர்கள் துணைவேந்தரை அலுவலகத்தினுள் அழைத்துச்செல்ல முற்பட்டார். இது எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் முயற்சியாகும். மாணவர்கள் துணைவேந்தரை உட்செல்ல அனு மதிக்காததனையடுத்து தரையில் உட்கார்ந்த பீடாதிபதி மாணவர்கள் வழிவிலகாத பட்சத்தில் தாம் பதவி விலகப்போவதாகத் தெரிவித்தார்.

இறுதியில் கலைப்பீடாதிபதியின் அலுவலகத்திற்குக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக துணைவேந்தர் அனுமதிக்கப்பட்டார். கலைப்பீடாதிபதியின் அலுவலகத்தில் வைத்து மருத்துவபீடாதிபதி பதவி விலகுவதாக அறிவித்ததனைத் தொடர்ந்து துணைவேந்தரை நாம் சந்தித்தபோது மருத்துவபீட மாணவர்கள் தடைசெய்வதற்கு எதிராக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படாதபட்சத்தில் தாம் பீடாதிபதியாக இருக்கப்போவதில்லை" எனக் கூறி பதவிவிலகல் கடிதத்தைக் தம்மிடம் கையளித்ததாகத் துணைவேந்தர் தெரிவித்தார்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியமானது எச்சந்தர்ப்பத்திலும் மருத்துவபீடாதிபதியைத் தடுத்து நிறுத்த முற்படவில்லை. அவர் எமது இறுதியாண்டு சத்திரசிகிச்சைக் கற்கை நெறியைத் தன்னால் மீள ஆரம்பிக்க இயலாது எனத் தெரிவித்தமையினாலேயே நாம் துணைவேந்தரிடம் சென்றிருந்தோம்

மருத்துவ பீடாதிபதியின் செயற்பாடுகள் எமது போராட்ட குறிக்கோளையே திசை திருப்புவதாக அமைவதால் இவை எமக்கு மிகுந்த வேதனையளிக்கின்றது என்பதனையும் மருத்துவபீட மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளையும் எதிர்கொள்ள மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தயாராக உள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கிராம மேம்பாட்டுத் திட்டம்; நடைமுறைப்படுத்தப்படுமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறுபட்ட அரசமற்றும் தனியார் வங்கிகள் இயங்கி வருகின்ற போதும் இவற்றின் மூலம் கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் ஏதும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் அங்கு இயங்கும் தனியார் மற்றும் அரச வங்கிகள் தாம் சார்ந்த பிரதேசங்களில் வாழும் பெரும பான்மைஇனத்தவரது கிராம முன் நேற்றத்திற்கான கடனுதவி, சுழற்சிமுறை கடனுதவி, சுயதொழில் முயற்சி கடனுதவி, கல்வி ஊக்குவிப்புகடனுதவி என பல்வேறு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி அப்பிரதேச மேம்பாட்டை மையமாக கொண்டு இயங்கிவருகின்றன.

ஆனால் இத்தகைய வங்கிகள் யாழ். குடாநாட்டுகிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எதனையும் முன்வைக்காது பொது மக்களைப் பல வழிகளிலும் சுரண்டி லாபம் ஈட்டும் நோக்குடனேயே இயங்கி வருவதாகவும் சமூக மேம்பாட்டு அமைப்புகள் பலவும் விசனம் தெரிவித்துள்ளன. (33)

## ஒளிராத மின்விளக்குகள்

யாழ்.சித்தன் கேணிச்சந்தியிலிருந்து சுழிபுரம் வரையிலான வீதியிலுள்ள மின் விளக்குகள் பல ஒளிரமுடியாதவாறு பழுதடைந்து போயுள்ளன.இதனால் இவ் வீதியூடாக இரவு வேளைகளில் பயணிப் போர் பல அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.இது குறித்து மின்சாரசபையினரிடம் முறையிட்டும் பலனில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## பெண்ணுக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்ற பெண் ஒருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

நெல்லியடிப் பொலிசாரால் சட்ட விரோதமாக சாராயம் விற்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பிரஸ்தாப பெண் தன்குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு இத்தீர்ப்பு அளிக்கப்பட்டது. (33)

## உரும்பிராயில் வைத்து பாடசாலை அதிபர் மீது தாக்கு!

(உரும்பிராய்)

உரும்பிராயில் பாடசாலை அதிபர் ஒருவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்; கடந்த ஓரிரு நாட்களின் முன்னர் இரவு 8.00 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதோர் வீட்டு வாசலில் வைத்து அதிபரைப் பலமாகத் தாக்கியுள்ளனர். இநதத் தாக்குதலுக்கான காரணம் எதுவும தெரியவர்வில்லை. (41)

## வடமராட்சி மணற்காடு பகுதியில் 200 நிரந்தர வீடுகள் அமைக்கப்படும்

### — யாழ்.அரச அதிபர் கே. கணேஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கு 200 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொன்றும் சுமார் நான்கு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியிலான வீடுகளாக அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன. இவ் வீட்டுத்திட்டத்திற்கான உதவிகள் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (33)

### வல்வெட்டித்துறைப் பகுதியில்

## நவீன புற்று நோய் வைத்தியசாலை நிறுவுவதில் தொடரும் இழுபறி நிலை!

(வல்வெட்டித்துறை)

யாழ்.வல்வெட்டித்துறையில் நவீன வசதிகள் கொண்ட புற்று நோய்வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் உயர் அதிகாரிகள் மட்டத்தில் நிலவிவரும் கருத்து முரண்பாடுகள், அதிகார இழுபறிகள் காரணமாக இதற்குரிய நடவடிக்கைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தரப்பிலிருந்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் நவீன வசதிகள் கொண்ட புற்று நோய் வைத்தியசாலை நிறுவப்பட வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து யாழ்.வல்வெட்டித்துறையில் இவ்வாறான ஒரு வைத்திய சாலையை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்குப் பதினைந்து சர்வதேச நாடுகள் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முன் வந்திருந்தன. எனினும் இவ்வைத்திய சாலையை நிறுவுவது தொடர்பாக உயர் அதிகாரிகளின் மட்டத்தில் நிலவிவந்த இழுபறிநிலைமைகள் காரணமாக இத்திட்ட முன்னெடுப்புகள் தடைப்பட்டுள்ளன.

இத்திட்ட முன்னெடுப்புகள் தடைப் பட்டமை யாழ்.குடாநாட்டவர்களுக்கே பேரிழப்பு என ஏற்பட்டாளர்களுள் ஒருவரான வல்வெட்டித்துறை மாவட்டவைத்திய அதிகாரி. வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார். (33)

## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களும், துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து நேற்று இவை வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்களை யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா வழங்கியதுடன் வடமராட்சிஅரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பனும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

## சுனாமி பாதித்த மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதம், கிராமசேவகரின் உறுதிப்படுத்தல் கடிதம், வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் தமிழ் மாணவர் ஒன்றியத்திடம் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன் கிழமை முற்பகல் இலக்கம்-155,கோவில்வீதி நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## பேருந்து சேவை வழி இலக்கங்கள் யாழ்.குடாநாட்டில் மாற்றப்படவுள்ளன

### –மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களம் அறிவிப்பு

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் பேருந்து சேவைகளின் வழி இலக்கங்களை மாற்றுவதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

நாட்டின் முழு இடங்களிலும் பேருந்துகளுக்கான வழி இலக்கங்கள் மாற்றப் படவுள்ளன. ஏற்கனவே ஒரே இலக்கத்தில் பல வழிகளிலும் பேருந்து சேவை இடம் பெற்று வருவதை கருத்தில் கொண்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.பல வழிகளில் ஒரே இலக்கத்தில் பேருந்து சேவைகள் இடம்பெறுவதினால் பிரயாணிகள் பல்வேறு சிரமங்களை அடைந்து வருகின்றமையைக் கருத்தில் கொண்டே வழிகளுக்கான இலக்கங்களை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெகுவிரைவில் யாழ் குடாநாட்டிலும் பேருந்து வழிப்பாதைகளுக்கான இலக்கங்கள் மாற்றப்படவுள்ளன. (41)

## கண்காட்சி

(நல்லூர்)

வடக்குக் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட தையல் மனையியல் கண்காட்சி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏழாலை மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. (41)

## 18 பாடசாலைகளைப் புனரமைக்க "வேல்ட்விஷன்" முன்வந்துள்ளது!

யாழ். வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பதினெட்டு பாடசாலைகளைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு " வேல்ட்விஷன்" என்ற சர்வதேச அரசசார்பற்ற அமைப்பு முன் வந்திருக்கிறது.

இத்திட்டத்தினடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள பாடசாலை புனரமைப்பு வேலைகளுக்காக வேல்ட் விஷன் நிறுவனத்தினரால் மூன்று மில்லியன் ரூபா உடனடியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சேதமான பாடசாலைகளைப் புனரமைப்பதன் மூலம் இப்பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு உதவுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். (33)

## மீளக்குடியமர்ந்தோருக்கு மின் விநியோகம் இல்லை

(காரைநகர்)

யாழ். காரைநகர்ப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் பலவும் தமக்கான மின்விநியோகத்தை வழங்கக் கோரி விண்ணப்பித்து நீண்டகால மாகிவிட்ட நிலையிலும் இக் குடும்பங்கள் பலவற்றிற்கான மின் விநியோகம் இன்னும் வழங்கப்படவில்லை. இதனால் இப்பகுதிகளில் மீளக்குடியர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் கைத்தொழில் மற்றும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

# வவுனியா பாடசாலைகளில் கற்பிக்கும் தொழில் வழிப்படுத்துநர்களுக்கான செயலமர்வு

(வவுனியா)

வவுனியா மாவட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் தேசிய கல்வியற் கல்லூரியின் கட்டுறுபயில்வு ஆசிரியர் பயிலுநர்களுக்கு உதவும் தொழில் வழிப்படுத்துநர்களுக்கான செயலமர்வு ஒன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் உடற்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை பீடாதிபதி க.பேர்ணாட், வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி, வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ ஒஸ்வேல்ட், தொடருறு கல்வி உபபீடாதிபதி த.இன்பதேவராஜ், கல்வி உபபீடாதிபதி கு.சிதம்பரநாதன், சிரேஷ்ட தொழில் வழிப்படுத்துநர் ஆ.சுபாஸ்கரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புரைகளை க.பேர்ணாட், சி.தண்டாயுதபாணி,திருமதி .ஒஸ்வேல்ட் ஆகியோர் நிகழ்த்தினர். (10)

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவுச் சேவை

2005ஆம் ஆண்டு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினரால் கிளிநொச்சி, முல்லை மாவட்டத்தில் முதலுதவி வகுப்புக்கள நடாத்தப் பெற்று வருகின்றது.கிளிநொச்சி மாவட்டத்தில் வெண்புறா நிறுவனத்திலும், நிதித்துறை சார்ந்த நிறுவனங்களிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் நடாத்தப் பெற்று வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தனியார் கல்வி நிறுவன மாணவர்களுக்கு நடாத்தப் பெற்று வருகின்றது.

மேலும் சிவராத்திரியை முன்னிட்டு உருத்திரீச்சரம் ஆலயத்திலும் முதலுதவிச் சேவை நிலையம் அமைக்கப் பெற்று முதலுதவிச் சேவைவழங்கப் பெற்றது.

மற்றும் கண் பரிசோதனை முகாம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் நடாத்தப் பெற்றது. மேலும் கிளி. மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று பாடசாலை சுகாதார மன்றத்தினருடன் இணைந்து சிரமதானப் பணி மேற்கொள்ளப் பட்டது.அத்துடன் பங்குனி மாதத்தில் வணிக நிறுவனங்களுக்கான நலன் பேணல் செயலமர்வும், பயிற்சி நெறியும் படைப்பிரிவினரால் நடாத்தப் பெற்றது.

வரும் 25அம் திகதி பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் அமைத்து முதலுதவிச் சேவை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றது.




கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12ஆவது அகவை நிறைவு விழா நிகழ்வின் போது பூநகரியில் பயனாளிகளுக்கு சூரிய மின்னொளி கடன் திட்டத்தின் கீழ் சூரிய மின்கலத் தட்டுக்கள் வழங்கப்படுவதை முதலாவது படத்திலும், உரிய கடன் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். .(படம் - கவியரசன்)

# தலைமன்னாரூடாக 16 அகதிகள் நாடு திரும்பினர்

(மன்னார்)

இந்தியா இராமநாதபுரம் மண்டபம் அகதி முகாம் கோயம்புத்தூர் புலோகப்பிட்டி அகதி முகாம், திருநெல்வேலி போக நல்லூர் அகதி முகாம் ஆகிய முகாம்களில் தங்கியிருந்த 16 இலங்கை வாழ் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பியுள்ளார்கள்.

இவர்களில் ஏழுஆண்களும், ஒன்பது பெண்களும் அடங்குவார்கள். இவர்கள் இந்தியாவிலிருந்து படகு மூலம் வந்து மணற்திட்டியில் இறக்கப்பட்ட வேளை தலைமன்னார் கடற்படையினர் கண்டு தமது படகில் ஏற்றி தலைமன்னார் பொலிசில் ஒப்படைத்ததையடுத்து மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய வேளை நீதிபதி எம்.எம். அப்துல்லா அவர்கள் அவர்களது சொந்த இடங்களான யாழ்ப்பாணம், நெடுந்தீவு, கொழும்பு, மட்டக்குளி, திருகோணமலை, உப்புவெளி வவுனியா தோணிக்கல்,மன்னார், உயிலங்குளம் ஆகிய அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# அம்பாறை மக்களுக்கு மன்னார் மக்கள் உதவி

சுனாமியினால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு மன்னார் திருமறைக் கலாமன்றத்தினர் நிவாரணப் பொருட்களான அரிசி, மா, சீனி, குழந்தைகளுக்கான பால்மா என்பனவற்றை வழங்கியுள்ளனர்.

மேலும் அங்குள்ள மக்களின் மேலதிக தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை விரைவில் பூர்த்தி செய்வதாகவும் மன்னார் திருமறைக் கலாமன்றத்தினர் வாக்குறுதியளித்துள்ளனர்.

இப்பணியை திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (18)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

வங்கி பணப்பரிமாற்ற அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. சந்தனம் சன்ஜீவன் என்பவருடைய கொமசல் வங்கி பணப்பரிமாற்ற அட்டையே கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஈழநாதம் பணிமனையில் கடமை நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும் (கு)

## பொதுக் கூட்டம்

வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 1.00 மணியளவில் பாடசாலை முதல்வர் சி.பாலகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற வுள்ளது. இப்பொதுக் கூட்டத்தில் பழையமாணவர்கள் ,பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (12)

# மன்னார் பொது வைத்தியசாலையில் எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆராய்வு

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் எதிர்காலத் திட்டம் பற்றியும், அதனை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கள் பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

இக்கருத்தமர்வு பிரதி சுகாதாரப் பணிப்பாளர் திருமதி. யூட்ரதனி தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் டாக்டர் விக்கினேஸ்வரன் கருத்துரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் பயனாளிகளாக மன்னார் மாவட்ட சுகாதாரம் சம்பந்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரச அரசசார்பற்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மேலும் இக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன், மன்னார் மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் யோசப் அவர்களும் கலந்துகொண்டனர். (18)

# கிராம அபிவிருத்தி குறித்து இலுப்பைக் கடவையில் கூட்டம்

## –அரச அதிபரும் கலந்து கொண்டார்

(மன்னார்)

மன்னார் இலுப்பைக்கடவை கிராமத்தில் கிராமத்தின் தேவைகள், திருத்தங்கள், முன்னேற்றங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு இலுப்பைக் கடவையின் வடக்குக் கிழக்கு அபிவிருத்திக் கழகத்தின் பிரதேசப் பொறுப்பாளர் ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விஸ்வலிங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர், பிரதேசப் பொறுப்பாளர் கலைப்பிரியா உட்பட பலர் கலந்து கொண்டு "கார்ப்" நிறுவனம் வழங்கவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னேற்றப் பாடுகளையும் ஒழுங்கு செய்தனர். இந்நிகழ்வில் நலன் விரும்பிகள் பலரும் கலந்துகொண்டனர். (18)

# திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான இளையோர் அமைப்பு

(முல்லைத்தீவு)

குமுழமுனை பிரதேச திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான "இளையோர் அமைப்பு" என்ற பெயருடன் கிராமத்தை கட்டியெழுப்புவதற்கான குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குமுழமுனை மகாவித்தியாலயத்தில வலயப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் ஆரம்பமான கலந்துரையாடலிலேயே இக்குழுதெரிவு செய்யப்பட்டது.

குமுழமுனைப் பிரதேசத்தில் காணப்படும் வீதிகள், பாடசாலைகளிலுள்ள குறைபாடுகள் மருத்துவ வசதிகள் இவை அனைத்தையும் ஒருமுகப்படுத்தி புனரமைப்புச் செய்வதே இந்தக் குழுவின் நோக்கமென அதன் தலைவர் தெரிவித்தார்.

இந்தக் குழுவின் தலைவராக சி.உதயநாதன், செயலாளராக சி.சிதம்பரநாதன், பொருளாளராக பா.கமல்ராஜன் ஆகியோர் உட்பட 11 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (20)

# தாயக விடுதலைப்பறவைகளின் 19 கலைஞர்கள் நோர்வே சென்றனர்

தமிழீழ விடுதலைப் போராட்டத் திற்கு தெருவெளி நாடகங்கள் மூலம் பெரும் பங்காற்றிய விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் "தாயக விடுதலைப்பறவை களிள்" 19 கலைஞர்கள் நேற்று முன்தினம் மாலை நோர்வே தலைநக்ர் ஒஸ்லோ சென்றடைந்துள்ளனர்.



எதிர்வரும் சனிக்கிழமை தாய கக் கலைஞர்கள் பங்கேற்கும் பிர மாண்ட எழுச்சி நிகழ்வு ஒஸ்லோவில் நடைபெறவிருக்கின்றது. இவர்கள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தாயகத்திலிருந்து சுவிஸ் நாட்டை சென்றடைந்தனர். இந்தக் கலைஞர்கள், தமிழீழ தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தெருவெளி நாடகங்களை நிகழ்த்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பலத்தைச் சேர்த்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுக் கலைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் நோர்வே தொர்ப் விமான நிலையத்தை சென்றடைந்தனர். இவர்களுடனான வரவேற்புச் சந்திப்பு ஒஸ்லோவில் அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூட மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. எதிர்வரும் சனிக்கிழமை சுதந்திர தாகம் எழுச்சி நிகழ்வில், புதுவை அன்பனின் நெறியாள்கையில் "கரைதேடும் ஓடங்கள்", பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் "சூரிய தேவியின் சோகங்கள்" ஆகிய நாட கங்கள் அரங்காற்றுகை செய்யப்பட வுள்ளன என்பதோடு, தாயக எழுச்சிப் பாடல்களும் இசைக்கப்படவுள்ளன. இந்நாடகங்கள் தாயகமண்ணில் எண்ணற்ற அரங்குகள் கண்ட நாடகங்கள் ஆகும். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நோர்வேயின் இன்னொரு நகரான பர்கனிலும் தாய கக் கலைஞர்கள் பங்கேற்கும் எழுச்சி நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

# அழகெழல்-2005 கலைத்துறை சார் போட்டிகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடாத்தும் அழகெழல்- 2005 கலைத்துறை சார் போட்டிகளில் முதற்கட்டமாக சித்திரம் சிற்பம் ஆகிய போட்டிகள் நாளை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கென சித்திரப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்களுக்கும், வெளியாளர்களுக்குமான திறந்த சிற்ப ஆக்கப் போட்டிக்கான ஆக்கங்களைப் படைத்தவர்கள் அன்றைய தினமும் தங்களுடைய சிற்பங்களை மேற்படி கல்லூரியில் ஒப்படைக்கலாம்.

போட்டி நடைபெறும் நாள் காலை 9.30 மணிக்கு அனைத்துப் போட்டியாளர்களும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான அழகெழல் போட்டிகள் மார்ச் 25,26 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியில் நடைபெறும்.

ஓவியப் போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மூன்று போட்டியாளர்களுக்கு மேற்படாமல் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். யாழ். மாவட்ட பாடசாலைகள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். (32)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



# மவோயிஸ்ட் தீவிரவாதிகளை எதிர்கொள்ள நேபாள அரசுக்கு உதவியளிக்கத் தயார்!

## -பாகிஸ்தான் அதிரடி அறிவிப்பு


(இஸ்லாமபாத்)

***நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை எதிர்கொள்ள அந்நாட்டிற்குத் தேவையான ஆயுதங்களையும், உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.***

நேபாளத்தில் ஷெர் பகதூர் தூபா தலைமையிலான அரசை பதவி நீக்கம் செய்த மன்னர் ஞானேந்திரா அவசர நிலையை பிரகடனம் செய்தார். இதனால், கொதிப்படைந்த மாவோயிஸ்ட்டுக்கள் நாட்டில் பொருளாதாரத் தடைவிதித்ததோடு, கலவரங்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டனர். இச்சம்பவங்களில் பலர் கொல்லப்பட்டனர். நாட்டில் அமைதி திரும்ப சர்வதேச நாடுகள் உதவ வேண்டும் என மன்னர் ஞானேந்திரா கோரிக்கை விடுத்தார்.

நேபாளத்திற்கு, இந்தியப் படைகளை அனுப்பும் எண்ணமில்லை என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதேசமயம் அந்நாட்டில் அரசியல் நிலைத்தன்மை உருவாக துணை நிற்போம் என்றும் கூறியுள்ளது. ஆனால், பாகிஸ்தான் அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது.

இது குறித்து நேபாளத்திற்கான முன்னாள் பாகிஸ்தான் தூதர் ஜமீர் அக்ரம் கூறுகையில், "நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுக்களை ஒடுக்கும் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் துணை நிற்கும். மன்னர் ஞானேந்திரா கேட்டுக் கொண்டால் அந்நாட்டிற்கு ஆயுதங்களையும், மாவோயிஸ்ட்டுக்களை சமாளிக்கத்தேவையான திட்டங்களை வகுக்க நிபுணர்கள் குழுவையும் அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறோம்"என்றார்.



பாக்தாத்தில் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் நேற்று குறைந்தது மூன்று குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் எழும் புகை மண்டலம். ஈராக்கின் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பென்டகன் இராணுவ அலுவலகத்திற்கு "அந்திராக்ஸ்"

(வோஷிங்டன்)

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா முழுவதும் 'அந்திராக்ஸ்' நோய்க் கிருமிகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்லேடனின் அல்ஹையிதா தீவிரவாதிகள் இந்த கிருமிகளை உயிரியல் ஆயுதமாகப் பயன்படுத்தி அமெரிக்கா மீது தாக்குதலை நடத்தினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் இரு தபால் ஊழியர்கள் உட்பட ஐந்து பேர் இந்த 'அந்திராக்ஸ்' கிருமிகள் தாக்கியதில் பலியானார்கள். மிகத் தீவிரமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்திராக்ஸ் கிருமிகள் பரவுவது தடுக்கப்பட்டது. சில ஆண்டுகள் ஓய்ந்திருந்த அந்திராக்ஸ் இப்போது அமெரிக்காவில் மீண்டும் பீதியை ஏற்படுத்தி இருக்கிறது.

வோஷிங்டனிலுள்ள பென்டகன் இராணுவ அலுவலகத்திக்கு வரும் தபால்களை பிரிக்க தனி அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்துக்கு வந்த ஒரு தபாலில் அந்தராக்ஸ் கிருமிகள் இருந்ததை நிபுணர்கள் கண்டு பிடித்தனர்.

. இதே போல் வேறு அலுவலகங்களுக்கும் அந்திராக்ஸ் கிருமிகள் அனுப்பப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் 200 ஊழியர்களுக்குத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

முக்கிய அலுவலகங்களுக்கு வரும் வாகனங்கள் சோதனையிடப்பட்டு மருந்துகள் தெளிக்கப்பட்ட பிறகே உள்ளே அனுமதிக்கப் படுகின்றன.


# இராணுவச் சுற்றி வளைப்பில் பின்லேடன் தப்பி விட்டார்

## ~பாகிஸ்தான் சனாதிபதி தகவல்



பாகிஸ்தான் படையினர் பத்து மாதங்களுக்கு முன் ஆப்கான் எல்லைப் பகுதியில் அல்-ஹையிதா தலைவர் ஓசாமாபின்லேடனைச் சுற்றி வளைத்து நெருங்கினர். அதன் பிறகு அவரது இருப்பிடம் தெரியவில்லை என பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறினார்.

பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில்; பாகிஸ்தான் படைகளிடம் பிடிபட்ட அல் ஹையிதா தீவிரவாதிகளிடம் நடத்திய விசாரணை மற்றும் நுணுக்கமான தகவல் அடிப்படையில் ஓசாமா பின்லேடனைத் தேடும் வேட்டை நடந்தது. பத்து மாதங்களுக்கு முன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் அவரைச் சுற்றி வளைத்து படைகள் நெருங்கின. அதன் பிறகு இருப்பிடம் தெரியவில்லை என்றார்.



ஈராக்கில் இத்தாலியப்படைகள்விலக முடிவு செய்துள்ளதையடுத்து அந்த வெற்றிடத்தை நிரப்ப புறப்படும் பிரிட்டிஷ் இராணுவ வீரரை அவதானிக்கும் சிறுவன்.

# வெளிநாட்டவரை குறிப்பிட்ட சில பணிகளிலிருந்து வெளியேற்றி விட மலேசியா தீவிர பரிசீலனை

(கோலாலம்பூர்)

உள் நாட்டில் தொழிலாளர்கள் கிடைக்கக்கூடிய பணிகளுக்கு வெளிநாட்டவரை நியமிப்பதைத் தடை செய்வது குறித்து மலேசிய அரசு பரிசிலனை செய்து வருகிறதென மலேசிய உள்துறை அமைச்சர் ஆஸ்மிகலீத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்து பணியில் அமர்த்தக்கூடிய சில பிரிவுகளிலும், வெளிநாட்டுத் தொழிலாளர்களை பல நிறுவனங்கள் நியமித்து வருகின்றன. குறைந்த கூலிக்குத் தொழிலாளர்களை அமர்த்துவதே இதன் நோக்கம். எனவே உள்நாட்டுத் தொழிலாளர்கள் கிடைக்கக்கூடிய பிரிவுகளில் வெளிநாட்டவரை நியமிக்கத் தடை விதிப்பது குறித்து பரிசீலனை செய்து வருகின்றோம். எந்தெந்தப் பிரிவுகளில் வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தலாம் என்பது குறித்து வரையறுக்கவேண்டும். இதர பிரிவுகளில் உள்நாட்டவருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.



தெற்குக் காஸா முனையில் இஸ்ரேல் ராணுவம் பயிற்சியிலீடுபடும் நிலையில் சிறுவனொருவன் அவர்களைப் போன்று சைகை செய்கிறான்.

# இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே இணக்கத்தை உருவாக்க ஊக்கமளிப்போம்

## –வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர்

(வோஷிங்டன்)

இந்தியா- பாகிஸ்தான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை தொடர அமெரிக்கா தொடர்ந்தும் ஊக்கமளிக்குமென வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க அதிபரின் வெள்ளைமாளிகைச் செய்தித் தொடர்பாளர் ஸ்காட் மெக்கல்லன் கூறியதாவது;இந்தியா- பாக் எல்லைப் பகுதியில் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் அந்நாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. இப் பேச்சுவார்த்தையில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பேச்சுவார்த்தையை ஊக்கப்படுத்தும் செயல்களில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடும். இதன் தொடக்கமாக வெளியுறவமைச்சர் கண்டோலிசாலரைஸ் தெற்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளில் ஒரு வார காலம் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசுகின்றார்.. இச்சந்திப்பின் போது ஆப் கானிஸ்தான், ஈராக் மற்றும் பாக் நாடுகளின் அரசியல் நிலவரம் இரு நாட்டு இராணுவப் படைகளும் இணைந்து கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வது உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து விவாதிப்பார். இதன் மூலம் இந்திய- அமெரிக்க உறவு மேலும் வலுவடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### கொலை முயற்சியில் உயிர் பிழைத்தார்

படுகொலை முயற்சியில் கொசோவோ சனாதிபதி இப்ராகிம் ருகோவா அதிஷ்டவசமாக உயிர் தப்பினார்.

ஐரோப்பிய யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை பிரிவுத் தலைவர் சேவியா சோலனா பிரிஸ்டினாவுக்கு வந்திருந்தார். அவருடன் சந்தித்துப் பேசுவதற்காக சனாதிபதி இப்ராகிம் ருகோவா காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென்று குண்டு வெடித்தது. இதில் ருகோவா காயமின்றி உயிர் தப்பினார். ஆனால் அவரது பாதுகாவலர் காயமடைந்தார். பாதுகாவலர் வந்த காரும் சேதமடைந்தது என்று பொலிஸ் அதிகாரி சப்ரிஜே கம்பெரி தெரிவித்துள்ளார்.

# ஈராக்கிலுள்ள இத்தாலியப் படையினர் செப்ரெம்பர் மாதம் விலகல்!

ஈராக்கில் நிலைகொண்டுள்ள இத்தாலியப் படையினர் செப்ரெம்பர் மாதம் விலக்கிக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை இத்தாலிய அரசு மேற்கொண்டுள்ளது.

இத்தாலிய இராணுவம் ஈராக்கிற்கு அனுப்பப்பட்டதற்கு இத்தாலியில் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் செம்ரெம்பர் மாதம் ஈராக்கிலிருந்து இத்தாலியப் படைகள் விலகிக் கொள்கின்றன. இந்தத்தகவலை இத்தாலியப் பிரதமர் பெர்லூஸ்கோணி தெரிவித்தார்.

ஈராக்கில் இப்போது இத்தாலிய ராணுவத்தில் 3085 பேர் உள்ளனர். ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க வீரர்களும் எண்ணாயிரம் இங்கிலாந்து வீரர்களும், 1700 போலாந்து வீரர்களும், 1600 உக்ரைன் வீரர்களுமுள்ளனர்.




சீனாவின் சஞ்சி மாகாணத்தில் அதிசக்திவாய்ந்த மின்சாரக் கம்பியொன்றில் ரக் வண்டியொன்று சிக்கிவிபத்துக்குள்ளாகியிருப் பதைப்படத்தில் காணலாம்.

# ஜே.வி.பியைத் தள்ளிவைத்துவிட்டு சனாதிபதி புலிகளுடன் சமாதானப்பேச்சை நடத்த வேண்டும்

இலங்கை நாட்டின் சமாதானம் சம்பந்தமாக மக்களின் உணர்வுகள் அதிகரித்த வண்ணமுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கவேண்டும் என்பது நோர்வே நாட்டின் விருப்பமாகும். இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்ட யோசனைகளினால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடையில் இறுகிப்போயுள்ளது. இதை சில சிங்கள அரசியல் வாதிகள் சிங்கள மக்களுக்கு வேறு விதமாக சித்திரித்துக் காட்டியுள்ளார்கள்.

எது எப்படி இருந்தாலும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக விடுதலைப்புலிகளோடு பேசித்தீர்ப்பதையே சிங்கள இனத்தவர்கள் விரும்புகின்றனர். நாட்டில் ஆரம்பிக்கப்படப்போகும் சமாதானப் பேச்சுவார்த்



விமல்வீரவன்ச

தைகள் எந்தக்கெடுதல்களையும் இந்நாட்டு மக்களுக்கு உண்டு பண்ணாது. எப்படியாவது இந்தச்சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி நல்லதொருமுடிவு ஏற்பட வேண்டும் என்பதே பெரும்பான்மை இனத்தவர்களின் விருப்பமாகும். ஹெலஉறுமய கட்சியும் தாங்கள் சமாதானத்தின் விரோதிகளல்ல, சமாதான அணுகுமுறைகளில் தான்பிழைகள் ஏற்பட்டுள்ளது எனக் கூறியுள்ளது.

கடந்தகாலங்களில் அனேக சர்வதேச மாநாடுகளில் நான் கலந்துகொண்டபொழுது, தமிழ் புத்திஜீவிகள் பலரை கண்டு கலந்துரையாடினேன் அப்பொழுது அவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் அல்ல. பக்கசார்பற்றவர்கள், இரண்டு நிலைப்பாடுகளைக்கடைப்பிடிப்பவர்கள். விடுதலைப்புலிகளின் தமிழீழம் என்பதே முன்னைய நிலைப்பாடாகும். ஆனால் பின் அவர்கள் தமிழ்ழக் கோரிக்கையில் இருந்து இடைக்கால நிர்வாகசபை மூலமாக சமஷ்டிமுறையை ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளனர். சமஷ்டி முறையைஇலங்கை அரசு வழங்காவிடில் தனிநாடு பிரிவதைத் தடுக்கமுடியாமல் போய்விடுமென விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர். ஆனபடியால் அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் சமஷ்டி ஆட்சியை இவர்களுக்கு வழங்க முடியும். இது நாட்டைப்பாதிக்காது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கினால் இலங்கை அரசு கொன்பெடரல் நிலைக்குத்தள்ளப்படும். அதாவது ஒரு சுயாதீன நாட்டில்இரண்டு நிர்வாகம் இதுவே கொன்பெடரல் நிலையாகும். இப்பொழுது இந்தக் கொன்பெடரல் ஆட்சிமுறை கொங்கொங் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒரு அரசின்கீழ் இரண்டு நிர்வாகங்களின் திறந்த பொருளாதாரக் கட்டமைப்பு பின்பற்றுதல் என்பதை சீன அரசாங்கம் தீர்மானித்தது.

கொங்கொங் நிர்வாகக் கட்டமைப்பு சீன அரசாங்கத்தின் கீழ் வந்தவுடன் அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. ஆகவே இப்பொழுது இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் அரசுக்கு எந்த இடையூறுகளும் வருவதற்கு இடம்கிடையாது. ஆனால் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசு விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசிப்பதை ஜே.வி.பி. வன்மையாக எதிர்க்கின்றபடியால் இவர்களைப்புறந்தள்ளிவிட்டு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும். மக்களிடம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்ப்புக் கிடையாது. தற்பொழுது சனாதிபதி இதை நன்கு உணர்ந்துள்ளார். நிட்டம்புவவில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் ஜே.வி.பி அரசின் சமாதான நிலைப்பாட்டை எதிர்க்குமானால் அவர்கள் அரசை விட்டு விலகிச் செல்லட்டும். அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் எனப்பகிரங்கமாகக் கூறியதை நாம்வரவேற்கின்றோம். அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாட்டை நாங்கள் உற்றுநோக்குவோமானால் அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக சபையை அமைத்துப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. சனாதிபதியுடன் அண்மைக்காலங்களில் எமக்குத் தொடர்புகள் இல்லையானாலும் அவரின் தற்போதைய அரசியல் நடவடிக்கைகளை நாம் பாராட்டுகிறோம். ஜே.வி.பியினர் தலைகீழாக நின்று குத்துக்கரணம் அடித்தாலும் தற்போதைய நிலைப்பாட்டில் இருந்து அவரை மாறவேண்டாம் என நான் கேட்டுக்கொள்கின்றேன். தெற்கிலுள்ள சிங்கள மக்கள் இடைக்கால அதிகாரப்பரவலாக்கலுக்கு எதிர்ப்புத்தெரிவிக்க மாட்டார்கள். விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கு சர்வசன வாக்கெடுப்புகளுக்கு விட்டால் நிச்சயமாக தெற்கு மக்கள் அதற்கு அங்கீகாரம் வழங்குவார்கள். ஆனபடியால் தற்போதைய சூழ்நிலையில் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நல்லதொரு தருணமாக அமைந்துள்ளது. சனநாயக நாட்டில் கதைப்பதற்கு சகலருக்கும் உரிமைகள் உண்டு.

சிலவேளைகளில் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளும், அரசாங்கத்தின் கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டால் இருதரப்பினர்களும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் கலந்தாலோசித்து பிரச்சினைகளுக்குச் சுமுகமான முடிவுகளைக் காணலாம். இந்த இருதரப்பினர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனால் கடைசியில் யுத்தத்தைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. ஆனபடியால் இப்படியான ஆபத்தான கட்டங்களுக்குச்செல்லாமல் பொதுப்பிரச்சினைகளினதும் ஆலோசனைகளைப் பெறுவது மிகஅவசியமாகும். இது சம்பந்தமாக பொதுமக்களுக்கு அறிவிப்பது மிக அவசியமாகும். மக்கள் யுத்தத்தை விரும்புவார்களானால் இதைத்தடுக்க எம்மால் முடியாது.

ஐக்கிய தேசியக்கட்சியும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அவர்கள் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றார்கள். ஆனபடியால் தற்போதைய அரசு அதிகாரப்பரவலாக்கலை முன்னெடுத் துப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அதற்கு அவர்களிடமிருந்து எதிர்ப்புக்கிளம்பாது. ஐக்கியதேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றிணைந்து பிரச்சினைக்கு முடிவுகட்டுவார்களானால் அதிக பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் சமாதான ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனபடியால் இங்கு ஜே.வி.பியும், ஜாதிகஹெலஉறுமயவும் எதிர்ப்புக்கோஷங்களைக் கிளப்பினால் அவைகள் யாவும் செல்லாக்காசாகிவிடும். அதேநேரத்தில் டக்ளஸ்தேவானந்[illegible] அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற[illegible]ல் அதிகாரப்பரவலாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார். அவர் பெட்டிப்பாம்பாகிவிடுவார்.

சுனாமிப் பேரழிவிற்குப்பின் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் நிவாரணஉதவிகளை மக்களுக்குப்பகிர்ந்தளிப்பதற்கு அதிகாரப்பரவலாக்கலுக்குச்சமமான சுனாமி நிர்வாக சபை ஒன்றை அமைத்திருக்கின்றது அரசு. இந்தச்சபையை மீண்டும் தாமதப்படுத்தக் கூடாது. இதனால் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுப்பகுதியில் அவர்களின் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்வதுடன், புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி புனர்நிர்மாணவேலைகளும் சீராகநடைபெறும். இதில் அரசுக்கு எந்த இடையூறுகளும் ஏற்படாது. ஆகாவே அதிகாரப்பரவலாக்கலுக்கு வெகுவிரைவில் தீர்மானங்களைக் காணமுடியும். இதை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் பாதிக்கப்படுவார்கள். சுனாமி நிவாரணப்பங்கீடுகளை சர்வதேச சமூகம் மிக உன்னிப்பாக கவனித்துக்கொண்டு வருகிறது. விடுதலைப் புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை அரசு மேற்கொள்ளாவிட்டால் வெளிநாட்டு உதவிகளும் இல்லாமல் போகலாம். சர்வதேச நாடுகளின் சுனாமி நிவாரணப் பணிகளை அழிவின் கணிப்பீடுகளின் படி 60 % தமிழர் பகுதிகளுக்கும் 40 % தென்பகுதிக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகவுள்ளது. இது தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்கள் கடந்தும் சுனாமி நிவாரணங்கள் பங்கீடு செய்வதில் அரசாங்கம் இழுபறி நிலையிலுள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும். சுனாமி நிவாரணசபை அமைப்பதில் சனாதிபதிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் ஒற்றுமை கிடையாது. இதை ஜே.வி.பி வன்மையாக எதிர்க்கின்றது. இவர்களது எதிர்ப்பிரச்சாரங்களும், பாராளுமன்றத்தில் இவர்களுக்கு 39 ஆசனங்களும் இருக்கின்றபடியால் சனாதிபதி இறுகிப்போயுள்ளார். இவர்கள் கூட்டுக்கட்சியில் இருந்து விலகினால் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாதென்பதை சந்திரிகா அம்மையார் நன்கு உணர்ந்துள்ளார். ஜே.வி.பி சனாதிபதிக்கு தலையில் குட்டு போட்டு அவரை மடக்கி வைத்துள்ளது. எவ்வளவு காலத்திற்கு சனாதிபதியை ஜே.வி.பியால் அடக்க முடியும் என்பதைப் பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். அவர்கள் அரசாங்கத்திற்கு எவ்வளவு விரோதமாகக் கதைத்தாலும், அரசாங்கத்தை விட்டு வெளியேறமாட்டார்கள். ஜே.வி.பி அரசாங்கத்தை விமர்சனம் செய்து கொண்டு தனது கட்சியை வளர்க் கும் படலத்தில் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இவைகளை உணர்ந்து அரசுக்கு ஆதரவளித்தால் நாடு உருப்படியாகும். இல்லையேல் இந்த நாட்டிற்கு எதிர்காலம் கிடையாது.

ஜே.வி.பி. யினருக்கு ஒரு விடயத்தை நினைவூட்ட விரும்புகிறேன். 39 ஆசனங்களும் தனி ஜே.வி.பியால் வெற்றிபெற்றதல்ல. சிறில[illegible]கா சுதந்திரக்கட்சியின் வாக்காளரினால் [illegible]9 அங்கத்தவர்களும் பாராளுமன்றம் சென்[illegible]ள்ளனர். ஆனபடியால் பிரச்சினைகள[illegible] தீர்க்க முடியாமல் பாராளுமன்றத்தைக் கலைத்தா[illegible] ஜே.வி.பியினருக்கு 12 அல்லது 15 ஆசனங்களுக்கு மேல் எடுக்க முடியாது. இதைத் தவிர்த்து வடக்கு கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மட்டும் சனாதிபதியும், ஐக்கிய தேசியக்கட்சியும் ஒரு உடன்படிக்கைக்கு வருவார்களானால் 2/3, பாராளுமன்ற அங்கத்துவம் இந்த இரண்டு கட்சிகளுக்கும் சென்றடையும். ஆனபடியால் ஜே.வி.பி துள்ளுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவர்களின் வால்கள் தானாகவே அறுந்து கீழே விழும். உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்தினால் ஜே.வி.பி தனித்து வெற்றி பெறமுடியாது. படுதோல்வியைத் தழுவிக்கொள்ள நேரிடும். ஆகவே நாட்டில் சகல அரசியல் கட்சிகளும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அரசாங்கத்தை மட்டும் கைப்பற்றும் நோக்கத்துடன் செயற்பட வேண்டாம் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். 25 வருடங்களாக இ[illegible]பிரச்சினை நாட்டில்



சந்திரிகா

நீடித்துக்கொண்டு போகிறது. இரண்டு பிரதான கட்சிகளின் கயிறு இழுத்தல் போட்டியில் நாட்டில் இனப்பிரச்சினையும், இழுபறிப்பட்டுக்கொண்டு போகிறது. ஆனால் இப்பொழுது சனாதிபதி அவர்கள் வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஆணித்தரமான கொள்கையை கடைப்பிடிக்கின்றபடியால் அதை நான் வரவேற்கிறேன்.

**(லங்காதீப சிங்கள நாளிதழ்)**
**ரஞ்சித்ஆனந்த ஜயசிங்க)**
**மொழியாக்கம்:-அ.சக்திவேல்**

ஆனபடியால் நாட்டில் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் தற்பொழுது முன்வைத்துள்ள கால்களை பின்வைக்கக் கூடாது. பயமின்றி சனாதிபதி அவர்கள் ஐக்கிய தேசியக்கட்சி அனுசரணையுடன் நாட்டில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்தினால் இந்த இருதலைவர்களின் பெயர்கள் இலங்கை சரித்திரத்தில் பொறிக்கப்படும். ஆனபடியால் ஜே.வி.பியின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் அவர்களைத் தள்ளி வையுங்கள். தனிமைப்படுத்துங்கள் இதுவே ஜே.வி.பியின் வளர்ச்சியைத் தடுக்கும் ஒரேமார்க்கமாகும்.

# ஐ.நா.மன்றில் கதிர்காமர் ஆற்றிய உரைக்கு உலகத்தமிழர் கூட்டமைப்பு கண்டன அறிக்கை

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத் தொடரின் உயர்மட்ட அரங்கில் நேற்று முன்தினம் ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட பொய்யான மற்றும் தவறான விபரங்களை சுட்டிக்காட்டி அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கடுமையான கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது

சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் ஆழிப்பேரலை நிவாரணப்பணிகள் இன்று முடங்கிக் கிடக்கும் நிலையினை மூடி மறைத்து, அது முழுவேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அவர் கூறியிருப்பதில் உண்மை எதுவும் கிடையாது. மிக விரைவாக ஆழிப்பேரலை புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கான இணைந்த நிர்வாக அமைப்பை உருவாக்குமாறு உலக நாடுகள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

தெற்கிலும், கிழக்கிலும் மட்டுமே ஆழிப்பேரலை பாதிப்பு ஏற்பட்டதாக அமைச்சர் கூறியமை வடக்கில் ஏற்பட்ட அழிவுகளை அவர் இருட்டடிப்புச் செய்துள்ளார். மேலும், நாட்டிலுள்ள எல்லாப்பகுதிகளுக்கும் பாரபட்சமின்றி ஆழிப்பேரலை உதவிகள் சென்றடைவதாக கூறியிருக்கும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்களை வடக்குக்குச் செல்ல விடாது தடுத்தமை, அரச உதவிகள் தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்லவில்லை என்கின்ற உண்மை அம்பலமாகிவிடும் என்ற அச்சத்திலேயே எனத்தெரிவித்துள்ளது அந்த அறிக்கை.

சிறுவர்களைப் படையில் சேர்ப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் மீது குற்றஞ் சுமத்தும் கதிர்காமர், ஆயுதப் போர் நடைபெறும் இடங்களில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றி ஐ.நா. தெரிவித்துவரும் ஏற்பாடுகள் பற்றி எதுவுமே கூறாது மூடிமறைப்பது ஏன் என்ற கேள்வியை கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் எழுப்பியுள்ளது.

சிறுவர்களை கொல்லுதல் - முடமாக்கல், பள்ளிகள் - மருத்துவமனைகளைத் தாக்குதல், பிள்ளைகள் மீதான பாலியல் வன்தாக்குதல்கள், சிறுவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை மறுத்தல் போன்றவை ஐ.நா ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் இவை அரசைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றி விடும் என்பதால் அவர் அதை மூடிமறைத்து விட்டார். இந்தக் கதிர்காமர் சில ஆண்டுகள் முன்னதாக ஐ.நாவை நையண்டி செய்து, மூன்றாம் உலக நாடுகளில் மலேரியாத் தடுப்புப்பணியொன்றைப் புரியவே அது தகுதியுடையது என்று கூறிவிட்டு இன்றைய கூட்டத் தொடரில் ஐ.நாவின் அபிலாசைகளைப் பாராட்டிப் பேசியது வியப்பைத் தருவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது மேற்கூறிப்பிட்ட மாநாட்டில் பங்குபற்றும் நாடுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியனவற்றின் கவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## கொழும்பு-கண்டி புகையிரத பயணிகளிடம் ஆயுதமுனையில் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து நேற்றுக்காலை கண்டிக்குச் சென்று கொண்டிருந்த புகையிரதத்தில் பயணம் செய்தவர்களின் தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையர்களால் கொள்ளையிடப் பட்டுள்ளன.

மேற்படி புகையிரதத்தின் இரண்டு பெட்டிகளுள் நுழைந்த கொள்ளையர்கள் ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி அங்கிருந்தவர்களிடம் பணம் மற்றும் தங்க ஆபரணங்களையும், கொள்ளையடித்துக் கொண்டு வளகும்பர புகையிரத நிலையத்தில் இறங்கித் தப்பிச்சென்றுள்ளனர்.

இதேவேளை இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கருத்துக்கூறிய புகையிரதத் திணைக்களத்தின் பாதுகாப்பு அத்தியட்சகர் சுனிமல் அத்தநாயக்க, அனைத்து புகையிரதங்களுக்கும் பாதுகாப்பை வழங்குவதற்கான மனித வளம் தம்மிடம் இல்லையென்கிறார். அதேவேளை தான் பாதுகாப்பு வழங்குமாறு பொலிசாரிடம் தொடர்ந்து கேட்டுவருவதாகவும் அவர் கூறினார்.

# கரையோர சூழல்பாதுகாப்பு இயற்கை அனர்த்த அழிவுகளை கட்டுப்படுத்தும்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் எனப்பல்வேறு பட்டவர்களிடம் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்புக்களுடன் இத்திட்டங்களை வெற்றி



இலங்கை அரசு தூரம் சம்பந்தமான வரையறைகளை மட்டும் கருத்திற் கொண்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டும் கரையோரத்தையும், மக்களின் வாழ்விடங்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியாது. கரையோர சூழல் பாதுகாப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அத்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களில் இருந்து அழிவுகளைக் கட்டுப் படுத்திக்கொள்ள முடியும். இத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அரசசார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் கரமாக நிறைவேற்றிக்கொள்ள இத்தகைய திட்டங்கள் வருமாறு.

01.கடல் அணைகளை ஏற்படுத்துதலும், தடைச்சுவர்களை அமைத்தலும்.

ஏற்கனவே வடபகுதியில் மாதகல் தொடக்கம் தாளையடி வரையான இடங்கள் முல்லைத்தீவு, தலைமன்னார் ஆகிய பிரதேசங்களிலும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இக்கடல் அரிப்புக்கள் காணப்பட்டிருந்த போதிலும், அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் வட கிழக்கில் கடலரிப்பு மோசமடைந்து கரையோரப்பாதைகள் அழிவுற்றும், அழிவுறும் நிலையிலும் காணப்படுவதுடன் சில பகுதிகள் கடற்பேரலையினால் அள்ளப்பட்ட நிலையும் காணப்படுகின்றது.


இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்கு கடற்கரையோரங்களில் கடல் அணைகளை ஏற்படுத்துதல், தடைச்சுவர்களை அமைத்தல் வேண்டும்.

02.கரையோரப்பகுதிகளில் மண் அகழ்வதைத் தடுத்தல், கரையோரப் பிரதேசங்களில் காணப்படும் மண் திட்டுகள் அண்மைக்காலமாக அழிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக வடமராட்சிகிழக்கு மணற்காடு, குடத்தனை போன்ற இடங்களில் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக மண்திட்டுக்கள் அழிவடைந்து கடல்நீர் கிராமங்களில் உட்புகுந்து விடும் அபாயம் இருந்து வருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் மணற்காடு கிராமம் முழுமையாக அழிவை எதிர்கொண்டதற்கு இத்தகைய மண் திட்டுக்கள் அழிவடைந்தமையும் காரணமாகும். எனவே இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல்.

03.முருகைக்கற்கள் அகழ்வைத் தடுத்தல்.

இச்செயற்பாடுகளினால் கரையோரப்பாதுகாப்பு குறைவடைந்து கடல்நீர் உள்வரும் ஆபத்து ஏற்படுகின்றது. இன்று பல்வேறு தேவைகளுக்காக முருகைக்கற்கள் அகழ்ந்தெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இதனைத் தடை செய்வதற்கோ அல்லது குறைப்பதற்கோ சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



04. காற்றுத்தடை வேலிகளை அமைத்தல்.

காற்றினால் ஏற்படும் அனர்த்தங்களைத் தடுக்கும் நோக்குடன் கரையோரப்பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுதல் அவசியம்.

அதாவது கரையோரமாக சிறிய மரங்களும், அதனையடுத்து ஓரளவு வளர்ந்த மரங்களும் படிப்படியாக பெரிய மரங்களும் வளர்த்து பாதுகாப்பதன் மூலம் கரையோர சூழலை பாதுகாத்துக்கொள்ளலாம்.

வடமராட்சிகிழக்குப் பிரதேசங்களில் அண்மைக்காலமாக இராணுவ நடவடிக்கைகளினால் சவுக்கு மரங்கள் பாரிய அளவில் அழிக்கப்பட்டு விட்டது. எனவே இதனை மீள் நடுகைத்திட்டத்தின் மூலம் மீளவும் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

05. கண்டல்காடுகளைப் பேணுதல் இவ்இயற்கையான காடுகள் கடலரிப்பைத் தடைசெய்வதன் மூலம் கடல்வாழ் உயிரினங்களின் உற்பத்திப் பரம்பல் எனப் பல்வேறு சூழல் சமநிலையைப் பேணுகின்றது. எனவே கண்டல் தாவரங்களை அழிவடையாது பாதுகாத்தல் வேண்டும். இவ் இயற்கையான பௌதீகத் தரைத்தோற்ற அமைவிடங்களை அமைத்துப் பேணுவதன் மூலம் கரையோரத்தையும், கரையோர மக்களின் இருபபிடங்கள், உடமைகளை இயற்கை அழிவுகளிலிருந்து எதிர்காலத்தில் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**க.பரமேஸ்வரன் தலைவர்,**
**நீர்உயிர்வள ஆசிரியர்சங்கம்**
**வடகிழக்கு மாகாணம்**
**ஆசிரியர் கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயம்.**

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் யாப்புத் திருத்தம் அவசியம்

**-அமைச்சர் டி.யு.குணசேகர**

நடைமுறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு அரசியலமைப்பு திருத்தத்தின் தேவை குறித்து அமைச்சர் டி.யு.குணசேகர சுட்டிக்காட்டினார்.

இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற என்.எம்.பெரேராவின் நினைவுதின வைபவத்தில் கலநது கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தர்வை அரசியலமைப்பிலுள்ளடக்க இன்று யோசனை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எண்ணத்தோடுதான் சனாதிபதி தொடர்ந்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மகாநாட்டை நடத்தினார். கூட்டாட்சி முறை இது ஒரு புதிய விடயமல்ல. 1997 ஆம் ஆண்டு முன்வைத்தோம். 2000 ஆம் ஆண்டும் முன்வைத்தோம். இவ்வாறான அரசியல் தீர்வை உரிய முறையில் செய்யமுடியுமென்றால் தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் அந்த நிலைப்பாட்டிற்கு வருவார்களென எனக்கு நம்பிக்கை இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒன்று கூடல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச பொது அமைப்புக்களுக்கான ஒன்று கூடல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் அரசியல் துறையைச் சேர்ந்த இராமஜெயம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு வட்டக்கச்சிப் பிரதேச பொது அமைப்புக்களான திட்டக்குழு, மாதர்சங்கம், வர்த்தக சங்கம், உற்பத்திக்குழு, கிராம அபிவிருத்திக்குழு, மகளிர் அமைப்பு எனப் பல்வேறு அமைப்புக்களும் கலந்துகொண்டன.

இவ் ஒன்று கூடலுக்கு வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடரும், பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஆரணி, வட்டக்கச்சிப் பிரதேசதுணைச் செயலர் சூரி அவர்களும் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் ஒவ்வொரு மாதமும் கலை நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகளும், குழுக்களும் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (12)

# அஞ்சல் சேவை ஊழியர்களின் பணிப்புறக் கணிப்பு தொடர்கிறது

அஞ்சல் சேவைதொலைத் தொடர்பு ஊழியர்கள் தொடர்ந்தும் பணிப்புறக் கணிப்பிலீடுபட்டுள்ளார்கள் பட்டதாரிகளை உள்வாங்குவதில். புதிய நடைமுறையைக் கடைப்பிடித்தல் மற்றும் தொடர்பாடல் முறையை தனியார் மயப்படுத்தல் உட்பட 21 விடயங்களை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது. நேற்றுமுன்தினம் இரவு முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்பு இன்று இரவு வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சங்கத்தின் செயலாளர். வீர சேகர கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் தபால் தொலைத் தொடர்புகளை தனியார் மயமாக்க எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் இந்த சுகவீன லீவுப் போராட்டம் நடத்தப்படுவதாகக் கூறினார்.

இது குறித்து தபால் தொலைத் தொடர்புகள் துறை அமைச்சர் டீ.எம். ஜெயரட்ண தெரிவிக்கையில்; அரசாங்கம் இதுவரை தபால் தொலைத் தொடர்புகள் துறையை தனியார் மயமாக்க முயற்சிக்கவில்லை. என்று அமைச்சர் தெரிவித்தார்.குறிப்பாக இந்தத் துறையை தனியார் மயமாக்குவது குறித்து சிந்திக்காத நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது ஆச்சரியமளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# 20 இளைஞர் பொலிசாரால் கைது

வவுனியாவில் வீதிகளில் நின்று சேட்டை புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் 20 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் ஐந்து சிங்கள இளைஞர்களும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மை நாட்களாக வீதிகளில் நின்று பெண்களுக்கும், மாணவிகளுக்கும் இளைஞர்கள் தொல்லை கொடுப்பதாக வவுனியா நீதிமன்றத்தின் நேரடிக் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து நீதவானின் கடுமையான கட்டளையின் கீழ் மேற்படி இளைஞர்களை பொலிசார் கைது செய்து வருகின்றனர். கடந்த மூன்று தினங்களுக்கு முன்னரும் இவ்வாறு 25 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

# சனாதிபதியின் கருத்தை வரவேற்று சனநாயக இடதுசாரி முன்னணி அறிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரேவழி அதிகாரப் பரவலாக்கல் ஒன்றே என்று அண்மையில் சனாதிபதி சந்திரிகா தெரிவித்த கூற்றை தமது கட்சி முழுமையாக ஆதரிக்கின்றதென சனநாயக இடதுசாரி முன்னணி அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இந்நாட்டில் நிலவும் அரசியல்முறைகளை நோக்கும் போது பல விடயங்களைக் குறிப்பிடலாம். எமது கருத்தின் படி அதிகாரப் பரவலாக்கல் மூலமன்றி வேறு எந்த வகையிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதே போன்று நிறைவேற்றதிகார சனாதிபதி முறையும் நீக்கப்பட வேண்டும் எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அரசமைப்பு மாற்றத்தையும் ஒன்றுபடுத்தி சிக்கல் நிலையை ஏற்படுத்தக் கூடாது. இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து அதன் பின்னரே நிறைவேற்று சனாதிபதி முறை நீக்கம் பற்றி சிந்திக்க வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும். ஆயினும் இவர்கள் இனப்பிரச்சினையைத் தவிர வேறு எந்தப் பிரச்சினை பற்றியும் சிந்திக்கக் கூடாது என்பது கட்சியின் விருப்பமாகுமெனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.


# UNIVERSITY OF JAFFNA
# TENDER NOTICE

The Chairman minor Tender Board. University of Jaffna Will receive sealed tenders from contractors Grade M8 and above registered with ICTAD for Termite proofing level I of three Storey Main Bulidings, Faculty of Medicine; University of Jaffna.

Tender Forms should be obtained from the Deputy Registrar Administration, University ofJaffna. up to 04th April 2005 until 3.00 p.m on producing valid registration book and receipt for the cach payments of refundable deposit and non refundable deposit at the shroff s counter of the University of Jaffna, during office hours,as shown below;

01) Refundable deposit - Rs.10,000/=
02) Non-Refundable deposit - Rs 500/=

The sealed envelope A and envelope B of the tender shall be again sealed in one envelope marked with the jop and the name of the work on the top left hand corner of the envelope and forwarded by registered post to reach the Chairman. Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at Registrar s Office, University of Jaffna. Tenders will be accepted till 3.00 pm on 11th April 2005 and open immediately after the time of closing.

. Tenderers or their accredited representations could be present at the opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Administration Branch of this University during office hours, of necessary.

Vice-Chancellor
University of Jaffna.

சி. (11396)

P.o.Box 57,
Thirunelvely,
Jaffna.


# கொழும்பு பிரபல பாடசாலையொன்றில் அமைச்சர் ஒருவரின் கைவரிசை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் வகுப்பறைப் பூட்டை உடைத்து பெற்றோர்களால வெளியிலிருந்து கொண்டு வரபபட்ட வகுப்பறைத்தளபாடங்களைப் பயன்படுத்தி ஆறாம் தரத்தில் கல்விபயில 42 மாணவர்களை வகுப்பறைகளில் இருத்தி அதிரடி நடவடிக்கை ஒன்றை தென மாகாணசபை அமைச்சர் ஒருவர் நடத்தியுள்ளார்.

அண்மைக்காலமாக ஆறாம் தரத்தில் மாணவர்களைச் சேர்ப்பதில பல பெற்றோர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அமைச்சர் இந்த துணிகர செயலில் ஈடுபட்டுள்ளார். பாடசாலை ஆரம்பிகும் முன்பு பூட்டப்பட்டிருந்த வகுப்பறைகளை உடைத்தே மாணவர்கள் வகுப்பறைகளில் விடப்பட்டனர்.

எனினும் பாடசாலை நேரம் முடிவடையும் வரை அங்கு எவ்வித கறறல் செயற்பாடுகளும் நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரமுக வங்கித்தலைவரைக் கைது செய்ய

# சர்வதேச பொலிசார் ஊடாக கொழும்பு உயர் நீதிமன்று நடவடிக்கை

(கொழும்பு)

தற்பொழுது நடைமுறையிலில்லாத பிரமுகவங்கியின் தலைவரும் தப்பியோடிய வங்கியாளருமாகிய றோகன் பெரேராவினை கைது செய்வதற்கான பிடியாணை ஒன்றை சர்வதேச பொலிசினூடாக கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரட்ண கூறுகையில; மேற்படி அன்னியச் செலாவணி மோசடி மேற்கொண்ட சந்தேக நபர் நாட்டில் இல்லை என்பதனையடுத்து சர்வதேச பிடியாணையை சர்வதேசப் பொலிசாரினூடாக மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதை அடுத்து இப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

றோகன் பெரேரா மீது வெளிநாட்டு காசுக்கட்டளைகள் மோசடி, சட்டவிரோதக் கடத்தல் போன்ற 217 குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவர் 1995.11.28-1996.04.30 வரை செலான் வங்கியின் பொது முகாமையாளராகவும் இருந்தார்.

இவர் நெதர்லாந்தில் இருப்பதாகத் தகவல் வெளிந்துள்ள போதும் தேடுதலில் அவர் அகப்படாதுள்ளார். இவருடன் அகமட் இப்திகார் வாகிட் என்பவருக்கும் பிடியாணை பிறபபிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் மேலும் ஐவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


# நீங்காத நினைவுடன்...

03 ஆம் ஆண்டு நினைவலை...



மலர்வு 1978-01-01 உதிர்வு 2002-03-17

செல்வி
செல்வநிலா
சுப்பிரமணியம்
மாதகல்

02 ஆம் ஆண்டு நினைவலை...



மலர்வு 1957-02-13 உதிர்வு 2003-04-22

திருமதி
தவராணி
தர்மபாலன்
மாதகல்

ஆண்டிற்கு ஒருவராய்
அடுத்தடுத்து உமையிழந்து
ஆறாத்துயருடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி , ஓம் சாந்தி ஓம் சாந்தி.

த.முகவரி
10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

வி.சுப்பிரமணியம்,
குடும்பத்தினர்.

(5804)

# கேரளாவின் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு

# உட்பூசல்களைத் தீர்க்க தீவிர முயற்சி!

(புதுடில்லி)

கேரள மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது.

கட்சிக்குள்ளே ஏற்பட்டுள்ள உட்பூசலைத் தீர்த்து வைப்பதையே அனைத்து மாநில காங்கிரஸ் கட்சியினரும், காங்கிரஸ் கட்சியின் உயர்பீடமும் விரும்புவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது டில்லியிலே தங்கியிருக்கும் கேரள முன்னாள் முதலமைச்சர் ஏ.கே அந்தோனி பிளவை நோக்கிச்சென்று கொண்டிருக்கும் கேரள காங்கிரசை விரைவாக மீட்டெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். 1964 ஆம் ஆண்டிலும் கேரள மாநிலத்திலே காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் பிளவு ஏற்பட்டது. அதன்போது கேரள காங்கிரஸ் 62 சட்டப்பேரவை உறுப்பினர்களை தன்னகத்தே வைத்திருந்தது. ஆனால் அப்போதைய பிளவின் பின்னர் நடைபெற்ற தேர்தல்களிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதாகக் குறைவடைந்ததையும், அந்தோனி காங்கிரஸ் மேலிடத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்க முடியும் என்பதையும் மேலிடத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது கேரளாவில் காங்கிரஸ் கட்சி விவகாரங்களை அகமது பட்டேல் கவனித்து வருகிறார். எனினும் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக காங்கிரஸ் உறுப்பினர் கருணாகரனுடன் பேச்சு நடத்த தயார் எனவும் அகமது பட்டேல் அறிவித்துள்ளார்.

# பீகார் ஆளுநரின் ஆலோசகர்களை நியமிப்பதில் இழுபறி

(பாட்னா)

குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் பீகார் மாநிலத்தில் ஆளுநரின் ஆலோசகர்களாக யாரை நியமிப்பது என்பது தொடர்பாக லல்லுப் பிரசாத் யாதேவுக்கும், ராம்விலாஸ் பஸ்வானுக்கும் இடையே கடும் மோதல் நடைபெறுகிறது. இதனால் இப்பதவிகளுக்கான அதிகாரிகள் நியமனம் தாமதமடைந்துள்ளது. இப்பிரச்சினையில் இறுதி முடிவு எடுக்கப்படும் வரை தற்போதைய தலைமைச் செயலர் கே.ஏ.எச்.சுப்பிரமணியத்தை சிறப்பு ஆலோசகராக ஆளுநர் பூட்டா சிங் நியமித்துள்ளார்.இதற்கான உத்தரவை ஆளுநர் அவர்கள் திங்கட்கிழமை மாலை பிறப்பித்துள்ளார் எனஅமைச்சரவை ஒருங்கிணைப்புத்துறைச் செயலர் விஜயப்பிரகாஷ் கூறினார்.

# தமிழ் சினிமா, ஒலிபரப்பு சேவைகள் பிறமொழிக் கலப்பைவிடுத்து

# தமிழ்ச்சொற்களை மட்டுமே பயன்படுத்த முன்வரவேண்டும்!

## –மொழிப்போர் மாநாடு குறித்து திருமாவளவன் வேண்டுகோள்



தமிழ்ச்சொல்லில் பெயர்சூட்டப்படாத சினிமாப் படங்களின் பெயர்களை மாற்ற வேண்டும் என்று தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

வருகின்ற 26 ஆம் திகதி திருச்சியிலே நடைபெறவுள்ள "மூன்றாவது மொழிப்போர் அறிவிப்பு" மாநாடு நடைபெறவுள்ளது. பொன்மலைப் பகுதியில் நடைபெறவிருக்கும் இம் மாநாட்டின் இடத்தைப் பார்வையிடவென திருச்சி வந்த திருமாவளவன், பத்திரிகையாளர்களிடம் பேசிய போது மேற்படி கருத்தைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் தெரிவிக்கும் போது தமிழக சட்டசபை தற்போது மக்கள் பிரச்சினையை விவாதிக்காமல் தேவையில்லாத கருத்துக்களை விவாதித்து அரட்டை அடிக்கும் இடமாக மாறியுள்ளது.

சட்டசபையிலே ஆளும் கட்சியினர் சினிமாப்பாட்டுப்பாடி கேலி செய்யும் போது பதிலுக்காக எதிர்க் கட்சிகளும் கேலி செய்வது முறையல்ல. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் பொறுப்பு அதிகமாகவுள்ளது. சட்டசபையிலே சினிமாப் பாட்டுப் பாடுவதற்காக உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்யவில்லை எனவும் கூறி அவர் பி.எப் படத்தின் பெயரை இயக்குநர் சூர்யா மாற்றியுள்ளார். அதேபோல "மும்பை எக்ஸ்பிரஸ்" படத்தின் பெயரையும் வருகின்ற 26 ஆம் திகதிக்குள் மாற்றி மகிழ்விக்க கமலஹாசன் முன்வரவேண்டும், ரஜினி நடிக்கும் சந்திரமுகி என்ற படத்தின் பெயரும் வடமொழிச்சொல்லாகும். இதனையும் மாற்றியமைக்க வேண்டும். அத்துடன் 'சன்டிவி' நிர்வாகமும் அதன் பெயரை தமிழிலே "கதிர் தொலைக் காட்சி" என மாற்றி ஒளிபரப்ப வேண்டும்.

தமிழாக்கம் கொண்ட ஆங்கில திரைப்படங்கள் ஒளிபரப்பப்பட வேண்டும். திருச்சியிலே நடைபெற இருக்கும் மாநாடு தமிழக அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வரும் எனத் தான் நம்புவதாகவும் திருமாவளவன் குறிப்பிட்டார்.

# அத்வானி பாகிஸ்தான் செல்கிறார்!

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி இம்மாதம் பாகிஸ்தான் செல்வார் என்று தெரிகிறது.

தங்கள் நாட்டுக்கு வரும்படி பாகிஸ்தான் அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று அத்வானி அங்கு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்ற வரவுசெலவுத்திட்ட கூட்டத்தொடரின் ஓய்வு காலமான மார்ச் 24 இலிருந்து ஏப்பிரல் 18 இற்குள் அத்வானி பாகிஸ்தான் செல்லக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.


BRITISH BUSINESS SCHOOL

BRITISH BUSINESS SCHOOL
Kanthasamy Kovilady,
Kilinochchi.

G .C .E (A/L) 2005 (June Batch)
EXAM PREPARATION CLASSES
for
" GENERAL ENGLISH "
commence on :- 21-03-2005

(சி.11399)



அம்பாளின் அருள் அகிலமெல்லாம் சூளும்

இரணைமடு அருள்மிகு

கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்

நிர்வாக அலுவலர்

பணிநிலை வேண்டுகை

இக்கோவிலில் நிர்வாக அலுவலர் ஒருவரை நியமிக்க பொதுச்சபை தீர்மானித்துள்ளது. கணக்கு எழுதத்தெரிந்த அருகில் வாழும் சமய அறிவும் ஈடுபாடுமுடைய ஓய்வுபெற்ற அரசஅலுவலர் விரும்பத்தக்கது.சம்பளம் பேசித்தீர்மானித்துக் கொள்ளப்படும்.
இவ் அலுவலர் பதவியை விரும்புவோர் 20032005 ஞாயிறு காலை 10 மணிக்கு கோவில் அலுவலகத்திற்கு உரிய சான்றுகளுடன் தயவு செய்து நேரில் வரவும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திரு.நா.சோதிநாதன்
தலைவர்

திரு.மு.இராமச்சந்திரன்
பொருளாளர்

(5861)

வி.சந்திரதாஸ்
செயலாளர்

அறங்காவலர்சபை
கனகாம்பிகை அம்பாள்
பெருங்கோவில், இரணைமடு.


# சாவு அறிவித்தல்

## கந்தையா சுப்பிரமணியம்

### பூநகரி

பூநகரி மறவகுறிச்சியை சொந்த இடமாகக் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 16.03.2005 நேற்று காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற கந்தையா செல்லம் என்பவரின் மகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், தவரஞ்சிதம், மனோரஞ்சிதம், ஞானரஞ்சிதம் (விவசாயப் பணிப்பாளர் அலுவலர் கிளிநொச்சி) தயாரஞ்சிதம் (மாவீரர் கல்கி), கோணேஸ்வரன் (பூநகரி ப.நோ கூ.ச எரிபொருள் நிலையம்), அமரர் கலாரஞ்சிதம், யோகரஞ்சிதம் (போராளி தீபா), சிவரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷபநாதன், குமாரசாமி (பூநகரி ப.நோ.கூ.ச எழுதுநர்), யோகலிங்கம் (நடுவகப் பணியகம்) ஆகியோரின் மாமனாரும், சுயிதா, சுதர்சனா, சுகன்யா, பிரதீபன், பிரதீபா (பூநகரி ம.வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் பேரனும் அரியரத்தினம் சமாதான நீதவான் பிரசித்தநெத்தாரிசு என்பவரின் மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 17.03.2005 வியாழக் கிழமை மு.ப.11 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடமான பூநகரி 4ஆம் கட்டை இல்லத்தில் நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:~ அரியரத்தினம்
பிரசித்தநெத்தாரிசு.

(சி.11398)

# கண்ணீர்க் காணிக்கை

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 |  | 13 |
| * | | * |
| 10 | | 03 |
| * | | * |
| 1940 | | 2005 |

அமரர்

## திருமதி. கணேசன் ஞானலட்சுமி

இல. 63 சிவநகர்,உருத்திரபுரம்,கிளிநொச்சி
(வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்)

அறுகம்புல் நுனிமீது
அழகொளிரும் பனித்துளியாய்
குளிர்மையைக் கொலுவேற்றி
குடும்பக்கோவிலுக்காய்
ஒளி தந்த தீபத்தின்
அணைந்த நாள் இந்நாளில்
அனைவரோடிணைந்து நாம்
துயரினைப்பகிர்கின்றோம்.


13.03.2005இல் சிவபதமடைந்த எமது நிறுவன நிர்வாகர் ராஜினி அவர்களின் பேத்தி திருமதி கணேசன் ஞானலட்சுமி அவர்களின் மறைவுச் செய்தியால் துவண்டு போயுள்ள அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

உதவிப்பணிப்பாளர்,
இணைப்பாளர்,
பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன,நிர்வாகத்தினர் [TRRO],
உருத்திரபுரம்.

(5860)

# கொல்கத்தா டெஸ்ட்; ராவிட் சதம் இந்தியா 344 ஓட்டங்கள் குவிப்பு



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா ஆறு விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

தொடக்கஆட்டக்காரர்களாக ஷேவாக்கும், கவுதம் கம்பீரும் களமிறங்கினர். இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 80 ஓட்டங்களைக் குவித்தனர்.

கம்பீர் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் ஷேவாக்குடன் ராவிட் இணைந்தார். இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.


இந்த நிலையில் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஷேவாக் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கர் களம்புகுந்தார். ஓட்டக்குவிப்பு ஆமைவேகத்தில் அவரது ஓட்டம் இருந்தது. மறுமுனையில் ராவிட் சிறப்பாக ஆடினார். டெண்டுல்கர் நேற்று 27 ஓட்டங்களைப் பெற்ற போது டெஸ்ட் கிரிக்கெட்டில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் என்ற சாதனை யைப்படைத்தார். அதற்குப்பின் அதிரடியாக ஆடிய சச்சின் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.




அவரைத் தொடர்ந்து கங்குலி களமிறங்கினார். அவர் நிலைத்து நிற்கவில்லை. 12 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த லக்ஸ்மன் ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய ராவிட்டுடன் தினேஷ்கார்த்திக் இணைந்தார். இருவரும்



நிதானமாக ஆடினர். போட்டி நிறைவடைய ஐந்து பந்துகள் வீசவேண்டிய நிலையில் ராவிட் ஆட்டமிழந்தார். அவர் 198 பந்து களை எதிர்கொண்டு சதமடித்தார். அவர் ஆட்டமிழக்கும் போது 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.பந்துவீச்சில் கனேரியா ,அப்ரிடி, அப்துல் ரசாக் தலா இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



## டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 10,000 ஓட்டங்களைக்கடந்தார்


சச்சின்

இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.கொல்கத்தாவில் நேற்றுஆரம்பமான இரண்டாது டெஸ்ட் போட்டியில் 27 ஓட்டங்களைப் பெற்றபோது 10,000 ஓட்டங்களைச் சச்சின் கடந்தார்.

முன்னதாக அலன்போடர், ஸ்ரீவ்வோ, கவாஸ்கர்,லாறா ஆகியோர் டெஸ்ட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தவர்கள் என்ற பெருமையைப் பெற்றுள்ளனர்.




## வடமராட்சி வலயமட்டப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலயமட்டப் பாடசாலைகளுக்கிடையில் கரப்பந்தாட்டம்.கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றிற்கான போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

இதில் கரப்பந்தாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்கல்லூரியிலும், 2 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் பெற்றது. 17 வயதுப் பிரிவில் 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் 2 ஆம் இடத்தை இமையாளன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும்,3 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும் பெற்றது. 19 வயதுப் பிரிவில் 1ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை வேலாயுதம்மகாவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பிரிவிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 1 ஆம் இடத்தை அமெரிக்கன்மிசன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை விக்கினேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை தும்பளை சைவப் பிரகாச மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப்பிரிவில் 1ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும், 2 ஆம் இடத்தை வடஇந்து மகளிர் கல்லூரியும்,3 ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பெற்றன.

17 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும், 2ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும்,3 ஆம் இடத்தை கம்பர்மலை வித்தியாலயமும் பெற்றன.

19 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும், 2ஆம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும்,3 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன

இப்போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற பாடசாலைகள் மாவட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்துள்ளார். (கா)

## யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைநடாத்தும் கால்பந்து இரண்டாம்நாள் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழவிளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டத்தினரின் அனுசரணையுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.15 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விபரம்வருமாறு.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கலைவாணி வி.கழகம் எதிர் பருத்தித்துறை லீக்கைச்சோந்த அல்வாய் நண்பர்கள் வி.கழகம்,

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த எ.எல்.வி.கழகம் எதிர் பருத்தித்துறை லீக்கைச்சேர்ந்த நவசக்தி வி.கழகம்

## இங்கிலாந்தில் குடியேற அவுஸ். வீரர் வோர்ன் விருப்பம்

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் வோர்ன் இவர் சமீபத்தில் இங்கிலாந்தில் உள்ள ஒரு கழகத்தில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து வோர்ன் இங்கிலாந்தில் குடியேற முடிவு செய்துள்ளார். என்றாலும் அவர் அவுஸ்திரேலியா அணிக்காக டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து விளையாடுவார். நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா வெற்றிபெற வோர்னின் பந்து வீச்சு முக்கிய காரணமாக இருந்தது.

121 டெஸ்டில் விளையாடி உள்ள வோர்ன் 573 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். 700 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதே தனது இலக்கு என்று அவர் கூறியுள்ளார்.



*பியூனாஸ் ஏர்ஸ் நகரில் நடந்த ஆஜன்டினா முதல் டிவிசன் கால் பந்து போட்டியில் ரிவர் பிளேட் 1-0 என்ற கோல் முன்னிலையில் ரேசிங் கிளப் அணியை வென்றது. இதில் ரிவர் பிளேட் அணியின் கார்லஸ்டிகோ (வலது) ரேசிங் கிளப் அணியின் செபாஸ்டியன் ரோமிரோ இருவரும் பந்தைத் தட்டிச் செல்லப் போராடுகிறார்.*

## கரவெட்டிப் பிரதேசகழகங்களுக்கிடையேயான போட்டி முடிவுகள்

கரவெட்டிப்பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான போட்டி முடிவுகள் வருமாறு,ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 1 ஆம் இடத்தை விக்ரர் விளையாட்டுக் கழகமும், 2ஆம் இடத்தை விபுலானந்தா விளையாட்டுக்கழகமும் பெற்றன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் 1 ஆம் இடத்தை மனோகரா விளையாட்டுக் கழகமும், 2 ஆம் இடத்தை பொம்பேர்ஸ் விளையாட்டுக்கழகமும் பெற்றன.ஆண்களுக்கான எல்லே போட்டியில் 1ஆம் இடத்தை மனோகரா விளையாட்டுக் கழகமும், 2ஆம் இடத்தை ஞானம்ஸ் விளையாட்டுக்கழகமும் பெற்றன. பெண்களுக்கான எல்லேப் போட்டியில் 1 ஆம் இடத்தை மனோகரா விளையாட்டுக் கழகமும்,2 ஆம் இடத்தை பொம்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. (கா)

## தடகளப் போட்டிகள்

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 02 ஆம்,03 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் தடகளப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பதிந்து தருமாறு கரவெட்டிப் பிரதேச விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் பா.முகுந்தன் தெரிவித்துள்ளார்(கா)

## உபகரணங்கள் வழங்கல்


கரைதுறைப் பற்று பிரதேசங்களிற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கடந்த திங்கள் அன்று மு/வித்தியானந்தா கல்லூரியில் வைத்து விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன, தமிழீழ விளையாட்டு துறையின் முல்லை மாவட்ட பொறுப்பாளர் கமல் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் வழங்கினார். தொடர்ந்து விளையாட்டு உபகர ணங்களான கரம்போட், டாம்போட் துடுப்பாட்மட்டை உதைபந்தாட்டத்திற்குரிய பந்து கரப்பந்தாட்டத்திற்குரிய பந்து என்பன தமிழீழ விளையாட்டுதுறை இணைப்பாளர் இன்பன் அவர்களால்வழங்கப்பட்டது. (20)



*யாழ். மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நடைபெறும் கால்பந்தாட்டப்போட்டியின் முதல்நாள் நிகழ்வின்போது*

(படம் ஆன்சலீன் )

## சிந்தனைக்கு



*சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம்*

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## சந்திரிகாவின் முன்...!

சனாதிபதி சந்திரிகா தனது அரசியல் எதிர் காலம் குறித்துத் தீர்மானிக்க வேண்டியதொரு தீர்க்கமான காலகட்டத்திற்கு வந்துள ளார். இது தனியாக அவரின் அரசியல் எதிர்காலம் மட்டுமல்லாது அவரின் குடும்பத்தின்– அதாவது பண்டாரநாயக்க குடும்பத்தினதும் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கும் எனின் மிகையாகாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிகாரத்தில் இருந்து இறங்கினால் பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் எதிர்காலம்– அதாவது சிறிலங்கா அரசியலில் அதன் பாத்திரம் இல்லாது போவது பெரும்பாலும் தவிர்க்கப்பட முடியாததொன்றாகவே இருக்கும்.

பண்டாரநாயக்க குடும்பத்தின் கடைசிவாரிசாகவும், இளவரசனாகவும் தன்னைக் கருதும் அனுரா பண்டாரநாயக்க அக் குடும்பத்திற்குப் புகழ் சேர்ப்பார் என சனாதிபதி சந்திரிகா மட்டுமல்ல வேறு எவருமே எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில், அநுராவின் கடந்தகால நடவடிக்கைகளும், தற்போதைய செயற்பாடுகளும் கோமாளித்தனமானவையாகவே உள்ளன.

இந் நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் இருந்து இறங்குவாரேயானால் அன்றி மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வரும் வாய்ப்பு அற்றுப் போகுமானால், அரசியலில் பண்டார நாயக்க குடும்பத்தின் பேச்சு படிப்படியாக மறைவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆகையினால் சனாதிபதி சந்திரிகா தனது இறுதிக் காலம் வரையில் அல்லது தனது வாரிசுகள் அரசியலில் பிரகாசிக்கும் வரையில் அரசியலில் பங்காற்ற/ அதிகாரத்தில் இருக்க முற்படுவார் என்றே எதிர்பார்க்கலாம்.

ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலையும், அரசியல் யாப்பும் சனாதிபதி சந்திரிகாவிற்கு வாய்ப்பானதாக இல்லை. சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் இவ் ஆண்டின் இறுதியிலோ அன்றி அடுத்த ஆண்டின் இறுதியிலோ முடிவடையலாம். மூன்றாவது தடவையாகவும் தான் உயர் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் 2001 ஆண்டு பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாக சனாதிபதி சந்திரிகா கூறுகின்றார். இதன் மூலம் 2006ஆம்ஆண்டு இறுதி வரை தன்னால் பதவியில் இருக்க முடியும் எனவும்வாதிடுகிறார்.

இருப்பினும் அவரின் பதவிக்காலம் 2005இல் முடிவடைவதாகவும், அதற்கு அப்பால் அவரைப் பதவியில் இருக்க அனுமதிக்கப் போவதில்லை எனவும் பிரதான கட்சியான ஐ.தே கட்சி சூளுரைத்துள்ளது. ஆகையினால் சனாதிபதி சந்திரிகா 2005 இல் பதவியை விட்டு இறங்காது 2006 வரை பதவியில் தொடர்வாரேயானால் பெரும் அரசியல் போராட்டங்களுக்கு அவர் முகம் கொடுக்க வேண்டியதாகவே இருக்கும்.

இது ஒரு புறம் இருக்க தற்போதைய அரசியல் சூழ்நிலை நீடிக்குமேயானால் சனாதிபதி சந்திரிகா 2005இலோ அன்றி 2006இலோ பதவியை விட்டு இறங்குவாரேயானால் அவரால் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவே முடியாது போய் விடும். ஒரு புறத்தில் கட்சிக்குள் நிலவும் அதிகாரப் போட்டியானது சனாதிபதி சந்திரிகாவிற்கு பின்னர் அதிகாரத்திற்கு வருவதற்கான சந்தர்ப்பத்தை வழங்காது செய்து விடலாம். சில வேளைகளில் மகிந்த ராஜபக்ஷவா? அநுராவா? என்ற போட்டி கட்சியையே உடைத்து விடவும் கூடும்.

இவற்றை விட சனாதிபதி சந்திரிகா இம்முறை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட வழிமுறையானது ஒரு வகையில் சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தையே பணயம் வைத்ததொன்றாகியிருந்தது. அதாவது ஜே.வி.பியைப் பலம் பொருந்திய சக்தி ஒன்றாக வளர்ச்சி காண வைத்ததன் மூலம், மூன்றாவது பலம் பொருந்திய சக்தியாக அதனை உருவாக்கி விட்டதோடு– அது அவருக்கெதிராகச் சவால் விடும் சக்தியாக உருவாகவும் அவரே காரணமாகியிருந்தார்.

இத்தகைய நிலையில் சுதந்திரக் கட்சியின் எதிர்காலம், சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி அதிகாரம் என்பன குறித்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய கால கட்டத்தில் சந்திரிகா உள்ளார். இதற்கான செயற்பாடுகளை தீர்க்கமான வகையில் அவர் மேற்கொள்ள வேண்டிய இறுதிக் காலப் பகுதிக்குள் வந்துள்ளார் என்றால் மிகையாகாது.

இதன்வெளிப்பாடாகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசியல் நகர்வுகளை தற்பொழுது மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். இவற்றில் இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி ஆட்சி முறை பற்றிய அவரது பேச்சுக்களும், ஐக்கிய தேசியக் கட்சியினருடன் ஓராண்டு காலம் இணக்கப்பாடான அரசியல் ஒன்றை நடத்துவதற்கான அவரது இரகசியப் பேச்சுவார்த்தைகளும் முக்கியமானவையாகும்.

இவ்விரு நடவடிக்கைகளின் மூலம் சனாதிபதி சந்திரிகா அரசியலில் ஜே.வி.பி தற்பொழுது வகித்து வரும் முக்கியத்துவத்தைக் குறைத்து விடவும், சுதந்திரக் கட்சிக்குள் பண்டாரநாயக்க குடும்பத்திற்கு ஏற்பட்டு வரும் சவாலை முறியடிப்பதோடு, மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு தான் வருவதற்கான வாயப்பைத் தோற்றுவிப்பதுமே சனாதிபதி சந்திரிகாவின் இலக்காகும்.

ஆனால் இது இலகுவானதொரு செயல் முறையாக இருக்க மாட்டாது. ஐ.தே.க வுடன் இணக்கப்பாடு காணப்படுவதோ அன்றி அதனைப் பிளவுபடுத்துவதோ பெரிதும் சவால் நிறைந்தது. அத்தோடு ஜே.வி.பி யின் வளர்ச்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்துதல் என்பதும், மகிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சிக்குள் பெற்று விட்ட செல்வாக்கை இல்லாது ஒழிப்பதும் இலகுவான பணியாக இருக்க மாட்டாது. அதாவது சனாதிபதி சந்திரிகா தனது அதிகாரத்திற்காகவும், தனது குடும்ப அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காகவும் பெரிதும் போராட வேண்டியதாகவே இருக்கும்.

# புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே பொதுக்கட்டமைப்பு உருவாக வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான பொதுக்கட்டமைப்பு உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்தப் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற விசேட சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்த அவர், இது சம்பந்தமாக வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இன்னும் சில விடயங்களில் மாத்திரமே இணக்கம் ஏற்பட வேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

# 50 வீதவாக்குகளைப் பெற்றுக் கொடுத்த ஜே.வி.பி. உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அரைவாசி வாக்குகளை பெற்றுக்கொடுத்தது ஜே.வி.பி ஆகும் எனினும் இன்று அதனை மறந்தமையால் நாட்டின் நிர்வாகம் சீரழிந்துள்ளதாக ஜே.வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார் .

நேற்று கட்சியின் கொழும்பு மாவட்ட குழுக்கூட்டம் நடைபெற்ற போது அதில் பங்கேற்று சோமவன்ச உரையாற்றினார்

1973 ஆம் ஆண்டு ஜே.வி.பி முன்வைத்த கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்தால் இன்று வடக்கு கிழக்கு யுத்தம் ஏற்பட்டிருக்க மாட்டாது.

இதேவேளை தனியார் வங்கி ஒன்றின் தலைவர் தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா மற்றும் லீ குவான் யு ஆகியோரிடம் நாட்டின் நிர்வாகத்தை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தமையை சோமவன்ச கண்டித்தார்.

இதற்கிடையில் கட்சியின் பிரச்சார செயலர் விமல் வீரவன்ச இங்கு உரையாற்றுகையில் சர்வதேசம் நாட்டை துண்டாட முயற்சிக்கும் நிலையில் அதனை ஜே வி பி முறியடிக்கும் எனக் குறிப்பிடுள்ளார். (32)

### வழக்கிற்கு உயரதிகாரி ஆஜராகாது

# நீதிமன்றத்தை உதாசீனம் செய்ததாக யாழ். பொலிசார் மீது குற்றச்சாட்டு

(வவுனியா)

யாழ். பேருந்து நிலையப் பகுதியில் இரண்டாயித்து மூன்றாம் ஆண்டு ஈழநாதம் வாரப்பிரதியை விற்றுக் கொண்டிருந்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படுகாயப்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்குத் தொடர்பாக யாழ். பொலிசார் நீதிமன்றத்தை உதாசீனம் செய்துள்ளதாக வவுனியா மாவட்ட நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கண்டனத்தை வவுனியா மாவட்ட நீதவான் என். இளஞ்செழின் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அதிகாரம் வாய்ந்த அலுவலர் ஒருவரை அனுப்பி வைக்கத் தவறியமைக்காக யாழ். பொலிசார் மீது நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதி நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த வழக்கு கடந்த சனவரி மாதம் 26 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது யாழ் பொலிஸ் நிலையத்தில் இருந்து றிசேவ் பொலிஸ் காண்ஸ்டபிள் ஒருவரே சமுகமளித்திருந்தார்.

இதனை அடுத்து அதிகாரி ஒருவரை அனுப்பிவைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி பணிப்புரை விடுத்து வழக்கை ஒத்திவைத்தார்.

இதேவேளை இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதும் யாழ். பொலிஸ்நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே ஆஜராகி இருந்தார்

பல்வேறு கடமைகள் காரணமாக உரிய பொலிஸ் அதிகாரி சமுகமாளிக்க முடிய வில்லையெனவும் கூறினார்.

இதனை அடுத்து நீதிமன்றத்தின் உத்தரவை யாழ். பொலிசார் உதாசீனப்படுத்துவதாகக் கூறிய நீதிபதி வழக்கை வரும் இருபதாம் திகதி வரை ஒத்திவைத்து அதிகாரம் வாய்ந்த ஒரு பொலிஸ் அலுவலரை அனுப்பிவைக்குமாறு மீண்டும் உத்தரவிட்டுள்ளார்

# ஆயுதக்குழுவை வெளியேற்றக்கோரி வெலிக்கந்த வாசிகள் மறியல்

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த பிரதேசவாசிகள் தமது பிரதேசத்தில் முகாமிட்டுள்ள ஆயுதக்குழுவை வெளியேற்றக் கோரி நேற்று வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியிலுள்ள செவனப்பிட்டிய சந்தியில் இந்த வீதிமறியல் போராட்டம் நடைபெற்றதால் பிற்பகல் வரை அவ் வீதி வழியான அனைத்துப் போக்குவரத்துகளும் தடைப்பட்டிருந்தன. கடந்த திங்கள் ஹரபொல கிராமத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாத இராணுவ சீருடை தரித்த ஆயுக்குழுவொன்றினால் அழைதத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற்கு தமது பகுதியிலுள்ள தீவுச்சேனையில் பதுங்குகுழி அமைத்து முகாமிட்டுள்ள ஆயுதக்குழு வொன்றே காரணம் என்றும், இதுபற்றி இராணுவம், பொலிஸ் மற்றும் ஆளும் கட்சி அமைச்சரான மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அறிந்திருந்தும் மௌனம் சாதித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த திங்கள் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களை அவர்களின் இல்லங்களிலிருந்து ஊர்வலமாக எடுத்து வந்து, ஹரபொல மற்றும் முத்துக்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நடத்திய இந்த வீதிமறியல் போராட்டத்தில் சகல இன மக்களும் கலந்து கொண்டனர். அங்கு சென்ற பாடசாலை மாணவர்கள் உட்பட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாசக அட்டைகளை ஏந்தியவாறு பிரேதப்பெட்டிகளுடன் இந்த வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும், அவர்கள் குறிப்பிட்ட ஆயுதக்குழுவினரால் தொடரும் இந்தப் படுகொலைகளுக்கு எதிராக தமது கண்டன உணர்வுகளை வெளிப் படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது . இக்குழுவினர் வெளியேற்றப்பட்டால் தங்கள் பிரதேசத்தில் தொடரும் அப்பாவிகள் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி கிடைக்கும் என்றும் அந்த நம்பிக்கை வெளியிட் டுள்ளனர்.

### சுனாமி அனர்த்த நிதியாக சிறிலங்காவுக்கு

## 96 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி .ஜப்பான் வழங்கி விட்டன

சுனாமி அனர்த்த நிதியாக ஜப்பான் இது வரை 81 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாவும்,உலக வங்கி 15 மில்லியன் டொலர்களை சிறிலங்கவுக்கு வங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இது குறித்து ஜப்பானிய தூதரகத்தின் பேச்சாளர் ஹைடேகி மட்சூவை தொடர்பு கொண்ட போது தமது அரசாங்கம் ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கத்துக்கு அனர்த்த நிதியாக 81 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.ஜப்பானிய அரசாங்கம் நேற்று வரை சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஆழிப்பேரலையின் பின்னர் புனரமைப்புகளுக்காக 81 மில்லியன் டொலர்களை பணமாகவே வழங்கியுள்ளதுஇதேவேளை உலக வங்கியின் பேச்சாளர் தகவல் அளிக்கையில், உலக வங்கி அனர்த்த நிதியாக 150 மில்லியன் டொலர்கள் தொடர்பில் ஒப்பந்தம் செய்துள்ளது.இதில் சுமார் 15 மில்லியன் டொலர்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிததுள்ளார். (32)

# சுனாமிஅனர்த்த நிதியுதவியாக இதுவரை ஐந்து சதமேனும் கிடைக்கவில்லை!

## சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க

ஆழிப்பேரலை நிதியுதவியாக இதுவரை வெளிநாடுகளிலிருந்து ஐந்து சதமேனும் கிடைக்கவில்லை என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை மத்திய வங்கியில் சனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வைப்புக்கணக்கில் 110 கோடி ரூபா கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தங்காலையில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது சிறிலங்கா சனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய சனாதிபதி, ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் சிறிலங்கா அரசிற்குப்பெருமளவு நிதி கிடைத் திருப்பதாகவும், அதனை அரசாங்கம் மறைத்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டில் எவ்விதஉண்மையும் இல்லை என்றும் அனர்த்தம் இடம்பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைவதற்கு பத்து தினங்களே உள்ள நிலையில் சனா திபதி செயலகத்தினால் மத்திய வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட வைப்புக்கணக்கில் 110 கோடி ரூபா வரை கிடைத்திருப்பதாகவும், இதனை வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கியிருப்பதாகவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நிதி கிடைக்கவில்லை என்ற சனாதிபதியின் பேச்சு ஆச்சரியம்தருகிறது!

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக சர்வதேச சமூகத்திடமிருந்து நிதியுதவிகள் எதுவும் கிடைக்கவில்லையென சனாதிபதி சந்திரிகா தெரிவிக்கின்ற கருத்துக் குறித்து நாம் ஆச்சரியமடைகிறோம் என ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

திறைசேரியின் செயலாளர் டி.பி ஜெயசுந்தர பாராளுமன்றக்குழுவின் முன்னிலையில் இதற்கு மாறான கருத்தை வெளியிட்டார் என ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்:-

சனாதிபதியின் கருத்துக் குறித்து ஆச்சரியமடைகிறோம். ஐந்து சதமேனும் கிடைக்கவில்லையெனக் கூறுகிறார். ஆனால் கடந்த மாதம் பாராளுமன்ற உயர்மட்டகுழு ஒன்றின் முன் தோன்றிய திறைசேரியின் செயலாளர் நாம் கேட்ட கேள்விகளுக்கு எவ்வளவு சர்வதேச நிதியுதவிகள் இலங்கைக்கு கிடைத்துள்ளன என்பதைத் தெளிவாக விபரித்தார். இதற்கமைய 700 மில்லியன் அமெரிக்க டெலர்களுக்கும் அதிகமான நிதி இலங்கைக்குக்கிடைத்துள்ளது. இவை உறுதிமொழிகள் அல்ல. உண்மையில் இவ்வளவு நிதி கிடைத்துள்ளது சனாதிபதி இவ்வாறான பொறுப்பற்ற கருத்துக்களைத் தெரிவிப்பதை விடுத்து. கிடைத்துள்ள நிதியுதவிகளின் மூலம் எவ்வாறு, பயனடையலாம் என்பது குறித்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதிகளை எவ்வாறு வழங்குவது என்பது குறித்தும் சிந்திப்பதே பொருத்தமானதென நாம் யோசனை கூறுகின்றோம் என்றார். (32)

# சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவத்தை சமாதான முயற்சிகளிலிருந்து வேறுபடுத்த முடியாது

## – சுவீடன் அபிவிருத்தி அமைச்சர் கரின் ஜம்மரினின்

சுனாமியின் பின்னரான முகாமைத்துவத்தை இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் இருந்தும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்தும் தனிமைப்படுத்த முடியாது என்று சுவீடன் அபிவிருத்தி அமைச்சர் கரின் ஜம்மரின் தெரிவித்துள்ளார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவின் பிரதிநிதிகளுடன்சுவீடன் வெளியுறவு அமைச்சில் அபிவிருத்தி அமைச்சர் பேச்சுக்களை நடத்தியபோது இக் கருத்துக்களை அவர் தெரிவித்தார். எந்தவொரு அனர்த்த முகாமைத்துவத்திற்கும் அமைதியான சூழ்நிலை இருக்க வேண்டும் என்றும் குறிப்பாக இலங்கையைப் பொறுத்தவரையில் இது முக்கியமானது என்றும் சுவீடன் அபிவிருத்தி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். சுனாமியின் பின்னரான அனர்த்த முகாமைத்துவத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் இருதரப்பும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவது குறித்து இப்பேச்சுக்களின்போது முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. சுனாமியின் பாதிப்பு ஏற்பட்ட வேளையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையும் சமாதான முன்னெடுப்புக்களும் வலுவிழந்த நிலையில் காணப்பட்டதாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பின்போது சுவீடன் அபிவிருத்தி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களில் நலிவடைந்த நிலையில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இச்சந்திப்பிற்கு முன்னர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான கூட்டுறவு நிறுவனத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து சுனாமி அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டமைப்பு புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

# மருதமுனையில் துப்பாக்கிச் சூட்டிற்கு இளைஞன் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

கல்முனை மருதமுனையில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு மரணமடைந்துள்ளார். நேற்று மாலை நடந்த இச்சம்பவத்தின் போது உயிரிழந்தவர் ஜெயநாதன் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் ஈருருளியில் சென்று கொண்டிருந்த சமயம் வேறொரு ஈருருளியில் வந்த இரண்டு இளைஞர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவசரநோயாளர் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமாலை 6.20 மணியளவில் இவர் மரணமானார்.

# மட்டு. களுதாவளையில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுதாவளை பனங்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.இதன் போது கொல்லப்பட்டவர் செங்கலடியைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெயகணேசன் (வயது 23) என்பவரென அடையாளம் காணப்பட்டுள்ளது எனக் களுவாஞ்சிக்குடிப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

களுதாவளை பனங்காடு மரஆலைக்கு முன்பாக தனது நண்பர்களுடன் தனித்தனி உந்துருளிகளில் சென்று கொண்டிருந்த போது வேறு மூன்று உந்துருளிகளில் வந்த ஆறு நபர்கள் இவர்களை வழிமறித்து வெளிச்சத்தைப் பாய்ச்சி மேற்படி நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு சம்பந்தப்பட்ட நபரின் உந்துருளியையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

# யாழ்.இலிருந்து மட்டக்களப்பு சென்ற குடும்பஸ்தரைக் காணவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார்

தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்குப் புறப்பட்டுச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காணாமல்போயிருப்பதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினில் புகார் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த நடராஜா புலேந்திரா (வயது -40) என்பவரே காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி புகார் செய்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான இவர் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றிருந்ததாகவும், எனினும் இதுவரை மட்டக்களப்பைஅவர் சென்றடையவில்லையெனவும் குறித்த முறைப்பாட்டினில் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று ஒருமாதகாலப் பகுதியினைக் கடந்துவிட்ட போதும் இவர் பற்றிய எந்தவொரு தகவலும் வெளியாகியிருக்கவில்லை.

இதனிடையே காணாமற் போன சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் குறித்த நபர் தொடர்பான தகவல்கள்களை எவரேனும் அறிந்திருந்தால் தமக்கு அறியத்தருமாறும் கோரிக்கை விடுதுள்ளது. (27)

# பிடிவிறாந்து

ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கேகலிய ரம்புக்வெலவுக்கு பிடிவிறாந்த விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்துள்ளது. வழக்கு ஒன்றில் சாட்சியளிப்பதற்காக அவர் பல தடவைகளாக வராமையை அடுத்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் சமூகமளிக்காமையை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (32)

### சமாதான...

சமாதான முயற்சிகள் மூலம் தீர்வு காண வேண்டும் என்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.அதற்கான வழிவகைகளை தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் நாள்தோறும் திட்டமிட்டுச் செயற்படுத்திவருகின்றார்.ஆனால், சிறிலங்கா அரசு சமாதான முயற்சிகளை இழுத்தடித்து போருக்கான சூழலை உருவாக்குவதிலும், போர் முனைப்புடன் செயற்படுவதிலும் அக்கறை செலுத்தி வருகிறது.

போர் நிறுத்த காலத்தில் ஏற்பட்ட அமைதிச் சூழலைப் பயன்படுத்தித்தமிழ்மக்களுக்கு நல்ல தீர்வினை வழங்க முடியாத அரசு, தமிழ் மக்களை போரின் பாதையில் தள்ளிவிடவே முயற்சிகள் செய்து வருகிறது.

இந்த உண்மை நிலையை சர்வதேச சமுகம் புரிந்து கொண்டு தமிழ்மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன் கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் வருகை தந்து சேதங்களை பார்வையிட்டமைக்காக தமிழ் மக்கள் சார்பிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை சார்பிலும் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சிறிலங்கா அரசானது கடந்த காலப் போரின் மூலம் தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்ததுடன் உடமைகளையும் அழித்தனர். சுனாமிப் பேரலை வடக்குக் கிழக்கு தமிழர் தாயகத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய நிலையிலும் சிறிலங்கா அரசானது தமிழ் மக்களுக்கு எதுவித உதவிகளையும் இதுவரை செய்யவில்லை ஆனால், கனடாவில் வசிக்கும் எமது தமிழ் உறவுகள் பலஉதவிகளைப் புரிந்துள்ளனர். நேரடியாகப் பலர் தமிழர் தாயகத்திற்கு வந்து உதவிகள் புரிந்துள்ளனர். அது மட்டுமன்றி சர்வதேச உதவி நிறுவனங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சுனாமிப் பேரனர்த்தத்தின் போது மக்களுக்குப் பல உதவிகளைப் புரிந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஜோகோ மாட்டீன், தமிழீழ விடுதலைப் புலிகளை கனடாவில் தடைசெய்யும் சூழல் எழும்போது கனடா பாராளுமன்றில் அத்தடை முயற்சிகளுக்கு எதிராக குரல் கொடுப்பேன் எனத் தெரிவித்தார்.

கனடா பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருக்கு தமி ழீழத் தாயகத்தில் சுனாமிப் பேரலை ஏற்படுத்தி அழிவுகள் தொடர்பாகப் புள்ளிவிபரங்களுடன் விளக்கப்பட்டன.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த செல்வின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கனடா பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருக்கு பாராளுமன்ற உறுப்பினர் மரியா மினா தலைமை தாங்கினார். அவர்களுடன் கனடா பாராளுமன்ற உறுப்பினர்களான டெரிக்லி பாராளுமன்ற உறுப்பினர் ஜோகோ மாட்டீன், செனற்ரர் ஜோசப்டே ஆகியோருடன் கனடாவை வதிவிடமாக கொண்ட தமிழ் சிங்கள வர்த்தக பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். சந்திப்பின் நிறைவில் கனடா பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகம் சென்றதுடன் முல்லைத்தீவுக்கு சென்று சுனாமிப் பேரலை ஏற் படுத்திய அழிவுகளையும் பார்வையிட்டனர்.

### புலிகளின்...

ஜேர்மனிய வெளிநாட்டமைச்சுடனான சந்திப்பிலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடனான சந்திப்பிலும் பங்கேற்றனர். ஜேர்மன் பயணத் திட்டத்தை நிறைவு செய்யும் அரசியல் விவகாரக்குழு இன்று காலை 7 மணிக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான தொடர் பயணத்தை மேற்கொள்கின்றன.

### ஆகக்...

பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான அம்சங்களை உள்ளடக்கியிருக்கவில்லை ஆனால் விரைவில் மீள் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளதால் அதனை தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### புலம்பெயர்ந்து...

புலிகள் மீட்பு நடவடிக்கையில் காட்டிய வேகத்துக்கு ஏற்ப பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர் உறவுகள் உதவிகளைப் புரிந்தனர். புலம்பெயர் உறவுகள் தம் நாடுகளில் வீதிகள்தோறும் நின்று நிதி சேகரித்தும். தமது உழைப்புகளை வழங்கியும் பெருமளவிலான உதவிகளைத் திரட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேகமாக அனுப்பி வைத்தனர். சிறிலங்கா அரசு எமது மக்களுக்கு உதவிகளை வழங்காத நிலையில் புலம் பெயர் உறவுகளே பாதிக்கப்பட்ட நமது மக்களுக்கு உடனடியாக வேகமாக கை கொடுத்தனர். புலம்பெயர் தமிழ் மக்களின் இந்த வேகமான செயற்பாட்டுக்கு தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். அழிவுக்குட்பட்ட தமிழர் தாயகப் பகுதிக்கு மக்கள் மறுவாழ்வுக்காக சிறிலங்க அரசு இதுவரை உதவிகள் எதையும் வழங்கவில்லை. தனக்கு கிடைத்த நிதிகளை அது ஒரு தலைப்பட்சமாகவே பயன்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் சர்வதேச உதவிகளை பாதிக்கப்பட்ட தாயக மக்கள் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுக்களை மேற்கொள்வதே தமது தற்போதைய பயணத்தின் நோக்கம். சிறிலங்கா அரசு புதிது புதிதாக ஆயுதக்குழுக்களை உருவாக்கிக் கொண்டு சிறிலங்கா இராணுவப்பகுதியில் அரசியல் பணியில் ஆயுதங்களின்றி ஈடுபடும் போராளிகளைக் கொன்றும் தாக்கியும் அச்சுறுத்தியும் வருகின்றது. இத்தகைய ஆயுதக்குழுக்களை தமிழர் தாயகப்பகுதியில் இருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நாம் நோர்வே தரப்பிடம் வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது